# விசாரணையைத் தாமதித்தால் பொலிஸ்மீது கடும் நடவடிக்கை

Registered as a News paper in Ceylon விலை சதம் 15 ★★

ஈழநாடு
சந்தா
தினப் பதிப்பு
மூன்று மாதம் — ரூ. 18-00
ஆறு மாதம் — ரூ. 34-00
ஒரு வருடம் — ரூ. 66-00

# ஈழநாடு

EELANADU

தபால் பெட்டி எண் 49
போன்: 389
National Tamil Daily
மலர் 11
இதழ்:183
தேசிய தினசரி

ஈழநாடு சந்தா
வாரப்பதிப்பு மாத்திரம்
மூன்று மாதம் — ரூ. 4-00
ஆறு மாதம் — ரூ. 7-50
ஒரு வருடம் — ரூ. 14-00
முற் பணம் கட்ட வேண்டும் தபால் அல்லது ஆள்மூலம் அனுப்பப்படும்.

யாழ்ப்பாணம் ஆடி 30 ஜம: அவ் 29 வியாழக்கிழமை [14-8-69]

யாழ்ப்பாணம், வியாழன் ''விசாரணைகளை தேவையின்றிக் காலதாமதமாக்குவதாகவும், லஞ்சம் வாங்குவதாகவும் பொலிஸாருக்கு எதிராகக் கிடைக்கும் புகார்கள் நிரூபிக்கப்பட்டால் சம்பந்தப்பட்ட பொலிஸார் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும்.''

வடபகுதியிலுள்ள நான்கு உதவி பொலிஸ் சுப்பிரின்டன்களுக்கு ஊடாக சகல பொலிஸ் நிலைய இன்ஸ்பெக்டர்களுக்கும் பொலிஸ் சுப்பிரின்டன் திரு. ஆர். சுந்தரலிங்கம் அனுப்பி வைத்துள்ள சுற்று நிருபம் ஒன்றில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொலிஸார் கைலஞ்சம் வாங்கிக் கொண்டு ஒரு பக்கத்துச்குச் சாதகமாக விசாரணை நடாத்தியதாகவும் விசாரணையில் பாரபட்சம் காட்டுவதாகவும், சில விசாரணைகளை தேவையின்றிக் தாமதமாக்குவதாகவும் கிடைத்த பல புகார்களைத் தொடர்ந்தே இச் சுற்று நிருபம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது

இதுசம்பந்தமாகபொலிஸ் சுப்பிரின்டன் பொது மக்களுக்கு விடுத்திருக்கும் வேண்டுகோள் ஒன்றில் எந்தப் பொலிஸாருக்கும் ஒரு போதும் கைலஞ்சம் கொடுக்க வேண்டாமென்றும், கைலஞ்சம் கேட்கும் பொலிஸார் பற்றிய தகவல்களை உடனடியாகத் தனக்குத் தெரிவிக்கும் படியும் கேட்டுள்ளார்.

இது பற்றி பொலிஸ் சுப்பிரின்டன் கருத்துத தெரிவிக்கையில் சோடா, சிகரட், வெற்றிலை போன்ற பொருட்களை பொலிஸார் பொது மக்களிடமிருந்து தடமையிலிருக்கும் போது வாங்குவதும், பொதுமக்கள் பொலிஸாருக்குக் கொடுப்பதும் கூட ஒருவகையான 'லஞ்சம்' தான் என்று குறிப்பிட்டார். (கா.நி)

## 'நூற்றாண்டு விழாகல்வி புரட்சியை ஏற்படுத்தும்'

யாழ்ப்பாணம், வியாழன் 'கல்வி நூற்றாண்டு விழாவை முன்னிட்டு வடமாநிலத்தில் பாடசாலை ரீதியாகவும், வட்டார ரீதியாகவும் கல்விப் பொருட்காட்சிகள் நடைபெற்று முடிந்து இன்று வடமாநிலக் காட்சி ஆரம்பமாவது எம் மத்தியில் மட்டற்ற மகிழ்ச்சியைக்கொடுக்கின்றது. மாணவர்மத்தியில்கல்விப் புரட்சியை ஏற்படுத்தஇதுஒரு ஏதுவாகவிருக்கும் என்பதில் ஐயமில்லை'

வடபகுதி வித்தியாதிபதி திரு. எஸ். தணிகாசலம் இவ்வாறு தெரிவித்தார்

வடமாநில கல்விப்பகுதியினராலும், வடமாகாண விஞ்ஞான ஆசிரிய சங்கத்தினராலும் ஒழுங்குசெய்யப்பட்ட கல்விப்பொருட்கட்டுசியும், விஞ்ஞான மாநாடும் நேற்று யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியிலும், வேம்படி மகளிர் கல்லூரியிலும் ஆரம்பமானது.

இவ்வைபவத்தை மத்திய கல்லூரியில் திறந்துவைத்த திரு. தணிகாசலம் மேலும் பேசுகையில், கைத்தொழில் விவசாய, விஞ்ஞான வளர்ச்சியால் நமது பிள்ளைகள் என்ன நன்மைகள் பெறுவார்கள் என்பதை இக்கண்காட்சி எடுத்துக்காட்டும் என்றார்

திருமதி தணிகாசலம் குத்துவிளக்கேற்றி இதனை ஆரம்பித்துவைத்தார். வடபகுதியைச் சேர்ந்த மொத்தம் 43 பாடசாலைகள் இக்கண்காட்சியில் கலந்து கொண்டன

பொருட்காட்சியும் விஞ்ஞான மாநாடும் நாளைவரை நடைபெறும் (கா நி)

# யாழ். மாநகர உத்தியோகத்தர் மீது நடவடிக்கை எடுக்க கோரிக்கை

## "இல்லையேல் மேயர் மீது அவநம்பிக்கையாம்"

நல்லூர், வியாழன் யாழ்ப்பாணம் மாநகர சபையில் உயர் பதவி வகிக்கும் ஓர் உத்தியோகஸ்தர் மீது நடவடிக்கை யெடுக்கும் படி கோரும் தீர்மானமொன்றிற்கு முன்னறிவித்தல் கொடுக்கப்பட்டிருக்கிறது. இத் தீர்மானம் சபையில் நிறை வேற்றப்படும் பட்சத்தில், அந்த உத்தியோகத்தர் மீதுஉடனடியாக நடவடிக்கை எடுக்க மேயர் தவறினால் யாழ்ப்பாண மேயர் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் ஒன்றை கொண்டுவர இப்பொழுதே முயற்சிகள் நடைபெற்று வருவதாக மாநகர சபை அங்கத்தவர் ஒருவர் தெரிவித்தார்.

இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டு வருவதற்கு எதிர்க்கோஷ்டியில்லாத் தீர்மானம் கொண்டு வரப்படும் என்று முன்னாள் மேயர் ஒருவர் நேற்று தெரிவித்தார். மேயர் கோஷ்டியைச் சேர்ந்த ஓர் உறுப்பினரும் இதனை வலியுறுத்தினார் இதுவரை 13 பேர் கையெழுத்திட்டிருப்பதாக அவர் தெரிவித்தார்.

தமிழ்க் காங்கிரஸ் மாநகர சபை உறுப்பினர்களான 8 பேரும் நேற்று முன்தினம் திரு ஜி ஜி பொன்னம்பலத்தைச் சந்தித்து மாநகர சபை சம்பந்தமான சில விஷயங்கள் பற்றி பேசினார்கள் என்று தெரியவருகிது.

நவீன மார்க்கட்கட்டும் ஒப்பந்தத்தில் உள்ள சில விதிகளுக்கு மாறாக ஒப்பந்தக்காரர் நடந்து கொண்டதற்கு இந்த உத்தியோகத்தர் ஒத்துழைத்தாகப் புகார் கூறப்படுகிறது

## வண்ணை நகரில் இன்று தேர்த் திருவிழா

வண்ணை ஸ்ரீ வைத்தீஸ்வரன் ஆலயத்தில் தேர்த் திருவிழாவாகிய இன்று பகல் 10 மணிக்கு வசநத மண்டபப் பூஜையும், பகல் 11 மணிக்கு ரதாரோகண்யமும், தொடர்ந்து திருப்பூங்குடி வி. க. ஆறுமுகம் அவர்களின் பக்திப்பாடல்களும், பிற்பகல் 2 மணி முதல் மாலை 4 மணி வரை திரு. பி. ஏ. எஸ். இராஜசேகரன் அவர்களின் பண்ணிசைக் கச்சேரியும், மாலை 4 மணி முதல் விசேஷ மேளக்கச்சேரிகளுடன் அம்பாள் இருக்கை சேர்தலும்.

தனியார்துறை ஊழியர்

## சம்பள உயர்வு ஆராய குழு நியமிக்கப்படும்

சோட்டை, புதன் தனியார்துறை ஊழியருக்கு சம்பள உயர்வு அளிப்பது சம்பந்தமாக ஆராய்வதற்கு அரசாங்கம் ஒரு விசேஷ கமிட்டியொன்றை விரைவில் நியமிக்கவிருக்கிறது என நிதி அமைச்சைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அதிகமான தொழிற்சாலைகளுக்கு அளிக்கப்பட்ட வரிச்சலுகைகளைத் தொடர்ந்து இவை லாபத்தில் நடைபெற்றுவருவதாகவும் இதனால் ஊழியர்களுக்கு இப்போது வழங்கப்பட்டுவரும் சம்பளத்தைவிடகூடுதலான சம்பளம் வழங்கக்கூடியநிலையில் இவை இருப்பதாகவும் பொதுவாக கருதப்படுவதாகவும் இதுவரை அதிகாரிகளே அதிக சம்பளம்பெற்றுவருவதாகவும் ஊழியர்கள் ஊழியர் தற்போது பெறும் சம்பளத்துடன் சரிப்பண்ண முடியாதிருப்பதால் சம்பள உயர்வுஅவர்களுக்கு தேவையென அபிப்பிராயம்வெளியிடப்பட்டுள்ளது.

விசேஷ கமிட்டி நியமனப் சம்பந்தமாக அடுத்த அரசாங்க ஆட்சிமன்றககூட்டத்தில் அறிவிக்கப்படவிருக்கிறது.

தனியார்துறை ஊழியர்களுக்கு சம்பளஉயர்வு கோரி தனியார்துறை தொழிற்சங்கங்கள் நீண்டகாலமாகக் கோரிவந்துள்ளது இங்கு குறிப்பிடத்தக்கது.

—

## தவறு

அமைதிக்குப் பங்கம் விளைவிக்கக் கூடிய வகையில் யாழ்ப்பாணம் மாஜிஸ்டிரேட் நீதிமன்றத்தில்

உரிமைகள் கிடைப்பதற்கு

## ஆசிரிய சேவைகமிஷன் நியமனம்செய்யவேண்டும்

## மனம்போல் வாக்களிக்க முடியாது

### நிஜலிங்கப்பா கண்டிப்பு

புதுடில்லி, ஆகஸ்ட் 13 காங்கிரஸ் கட்சியைச் சகல எம்.பி மாரும் ராஜ்ய சட்டசபை அங்கத்தவர்களும் ஜனாதிபதி தேர்தல் கட்சி வேட்பாளரான சஞ்சிவரெட்டிக்கு வாக்களிக்க வேண்டும் என்று காங்கிரஸ் தலைவர் திரு. நிசலிங்கப்பா திரு ஜகஜீவன் ராமுக்கும், பகிருதீன் அலஅகமத்துக்கும் எழுதியுள்ள கடிதத்தில் தெரிவித்திருக்கிறார்.

எம்.பி மாரும் ராஜ்ய சட்டசபை அங்கத்தவர்களும் தம் மனம்போல் வாக்களிக்க அனுமதிக்கும்படி கோரி திருவாளர்கள் ஜகஜீவன்ராமும் பகிருதீன் அலி அகமத்தும் காங்கிரஸ் தலைவரைக் கேட்டிருந்தனர்.

காங்கிரஸ் கட்சிக்குள்இத் தேர்தல் சம்பந்தமாக பலத்த பிரச்னை கிளம்பியுள்ள போதிலும்பிரதமர் இந்திரா காந்தி பகிரங்கமாக யாரை ஆதரிக்கவேண்டும் என்பது பற்றி இதுவரை கூறவில்லை.

## சீனஎல்லைக்குள் சோவியத்துருப்பு

பீக்கிங், ஆகஸ்ட் 13 நூற்றுக்கும் அதிகமான சோவியத்துருப்புக்கள் சீன எல்லைக்குள் புகுந்துள்ளதாக சீனச்சேய்தி ஒன்று கூறியது இருதரப்பினரும் மோதுண்

## ரூபா 100 அபராதம் சார பறி முதல்

யாழ்ப்பாணம், வியாழன் சுமார் 2000 ரூபா பெறுமதியான 50 பனையகாட் சாரங்களைக் கம்பளைக்குக் கொண்டு செல்ல முயற்சித்த

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

பெற்றுவருவதாகவும் இதனால் ஊழியர்களுக்கு இப்போது வழங்கப்பட்டுவரும் சம்பளத்தைவிடகூடுதலான சம்பளம் வழங்கக்கூடியநிலையில் இவை இருப்பதாகவும் பொதுவாக கருதப்படுவதாகவும் இதுவரை அதிகாரிகளே அதிக சம்பளம்பெற்றுவருவதாகவும் ஊழியர்கள் லாபத்தில் அதிகபங்குபெற வாய்ப்பின்றியிருப்பதாகவும் அவதானிக்கப்பட்டுள்ளதாக அரசாங்க அதிகாரி மேலும் தெரிவித்தார்.

இதைத்தவிர வாழ்க்கைச் செலவுசமீபகாலத்தில் உயர்ந்துள்ளதால் தனியார்துறை

கங்கள் நீண்டகாலமாகக் கோரிவந்துள்ளது இங்கு குறிப்பிடத்தக்கது.

---

## தவறு

அமைதிக்குப் பங்கம் விளைவிக்கக் கூடிய வகையில் யாழ்ப்பாணம் மாஜிஸ்டிரேட் நீதிமன்றத்தில் மதுபோதையில் கைதானவர் அரசாங்க ஊழியரென்றும். அவர் நீதிமன்றத்திலேயே கடமை யாற்றும் ஊழியர் என்றும் நேற்றைய ஈழநாட்டில் தவருக செய்தி வெளியிட்டமைக்காக வருந்துகின்ருேம்.

பாண மேயர் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் ஒன்றை கொண்டுவர இப்பொழுதே முயற்சிகள் நடைபெற்று வருவதாக மாநகர சபை அங்கத்தவர் ஒருவர் தெரிவித்தார்.

இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டுவருவதற்கு எதிர்க்கோஷ்டியினருடன் மேயர் கோஷ்டியை சேர்ந்த இருவரும் சேர்ந்திருப்பதாக அவர் கூறினுர்

மாநகர சபை உத்தியோகத்தர் மீதான தீர்மானம் சபைக்கு வந்த பின்னர் மேயர் மீதான நம்பிக்கை

---

வடபகுதி அஸைஸ் விசாரணை

# 2-ம் எதிரி தடியால் தாக்கினர் 1-ம்,3-ம் எதிரிகள் வெட்டினர்கள்

## வெள்ளாங்குளம் கொலை வழக்குவிசாரணை

யாழ்ப்பாணம், வியாழன்

பஸ்ஸிலிருந்து 2-ம்எதிரி கத்தியுடன் இறங்கினுர். பின் 1-ம், 3-ம் எதிரிகள்கத்தியுடன் இறங்கினுர்கள். 2-ம் எதிரியும் நடராசாவும் இழுபறிப்பட்டுக் கொண்டிருந்தனர். 1-ம், 3-ம் எதிரிகள் கத்தியை ஓங்கியபடி வந்தனர். இறந்தவர் பின் பக்கமாக படலையைத் தாண்டி வந்தார். நான் உபதபாற்கந்தோரிலிருந்து எழுந்து ஓடிவந்து வளவிற்குள் ஒன்றும் செய்யவேண்டாம் என்று கையெடுத்துக் கும்பிட்டேன், அந்நேரம் 2-ம் எதிரி ஓடிவந்து தடியைத் தூக்கி இறந்தவரின் தலையில் அடித்தார். அவர்கீழே விழுந்துபோனுர், 1-ம் எதிரி தலைப்பக்கமும், 3-ம் எதிரி கால்பக்கமும் வெட்டினுர்கள்.

மன்னுர் வெள்ளாங்குளம் கொலைவழக்கில் சாட்சியமளித்த சப்போஸ்ட்மாஸ்டர் ஆறுமுகம் தம்பிப்பிள்ளை மேற்கண்டவாறுகூறினுர். இவ்வழக்கு நேற்று காலை வடபகுதி அசைஸ் கோர்ட்டில் நீதியரசர் வி, சிவசுப்பிரமணியம் முன்னிலையில் விசாரணை செய்யப்பட்ட .

இவ்வழக்கில் வெள்ளாங்குளத்தில் 67-ம் ஆண்டு ஜுன் மாதம் 2-ம் தேதி சிதம்பரப்பிள்ளை சிவஞானசுந்தரம் என்பவரை ஏரம்புசோதிலிங்கம்படுகாயம்விளைவித்ததாகவும்.ஏரம்புகார்த்திகேசு காயம் விளைவித்ததாகவும் சிதம்பரநாதன் கொலைசெய்ததாகவும் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. 1-ம் எதிரி சார்பில் அட்வகேட் சம்பந்தர், அட்வக்கேட் எஸ் ஸ்ரீனிவாசனின் உதவியுடனும் புறக்டர் ஆர் விஸ்வநாதன் புறக்டர் வி ஏ ஈ பாலசிங்கத்தின் அனுசரணையுடனும் ஆஜரானுர். 2.ம் எதிரிசார்பில் அட்வகேட் கே வி எஸ் சண்முகநாதன் புறக்டர் ஆர் விஸவநாதன் புறக்டர் வி ஏ. ஈ பாலசிங்கம் ஆகியோரின் அனுசரணையுடன் ஆஜரானுர். 3-ம் எதிரிசார்பில் அட்வகேட் எஸ் தம்பித்துரை புறக்டர் ஆர் விஸ்வநாதன், வி ஏ ஈ பாலசிங்கத்தின் அனுசரணையுடனும் ஆஜரானுர்

எதிரிகளுக்காக அரசாங்கத்தால் ஆட்வகேட் வி எஸ் சி ஆனந்தன் ஆஜரானுர்

ஆறுமுகம் தம்பிப்பிள்ளை சாட்சியமளிக்கையில் கூறியதாவது: வெள்ளாங்குளத்தில் எனது வீட்டில்தான் உபதபால் கந்தோர் இருக்கிறது இறந்தவரையும் எதிரிகளையும் எனக்குத் தெரியும் எதிரிகள் சகோதரர்கள் இறந்தவரும் நடராசா என்பவரும் சம்பவம் நடந்த தினம் காலை 10 30மணிக்கு வந்தார்கள் இறந்தவர் விருந்தையிலிருந்து எழுதப்போவதாக கேட்டார். என்னிடம் என்வலப் முத்திரை வாங்கினுர் 15 நிமிடம் விருந்தையிலிருந்து எழுதினுர் பின் வெளியில்சென்று விட்டனர் காலை 11-30 மணிக்கு சிவஞானசுந்தரமும் நடராசாசாவும் வந்தனர் இறந்தவர் தபால் பதிவுசெய்யும்படி சொன்னுர் வவனியா உள்ளூராட்சி உதவி ஆணையாளருக்கு அக்கடிதம் அனுப்பப்பட்டது பற்றுச்சீட்டுக்கொடுத்தேன் இறந்தவர் 'பஸ் வரும் பார்' என்ருர் அந்நேரம் பஸ் வந்தது பஸ்வருகிறது வா என்று நடராசா சொன்னுர் இருவரும் போனுர்கள் பஸ் நின்றதை கண்டேன் பஸ்ஸிலிருந்து எதிரிகள் வத்ததனர்

2ம் எதிரி தடியால் அடித்ததும் சிவஞானசுந்தரம் கீழே விழுந்து விட்டார். 1ம் எதிரி தலைப்பக்கமும் 3ம்

(4-ம் பக்கம் பார்க்க

---

## அமைச்சர் பிலிப் 20-ம் திகதி விஜயம்

யாழ்ப்பாணம், வியா.

கைத்தொழில் கடற்ருெழில் அமைச்சர் திரு. பிலிப் குணவர்த்தன இம்மாதம் 20-ம் திகதி யாழ்ப்பாணம் வருகின்ருர். யாழ்ப்பாணத்தில் நிறுவப்படும் ஒட்டுப்பலகை கூட்டுஸ்தாபனத்தின் விற்பனை நிலையத்தை இவர் இங்கு திறந்து வைப்பார். (கா. நி)

---

## சத்திய பிரமாணம்

சென்னை, ஆகஸ்ட் 13

தி.மு க செயலாளர் திரு நெடுஞ்செழியன் ராஜ்ய கவர்னர் உஜல்சிங் முன்னிலையில் அமைச்சராகப் சத்திய பிரமாணம் செய்து கொண்டார். திரு கருணநிதியின் அமைச்சரவையில் இவர் கல்வி, அமைச்சராக நியமனம் பெற்றுள்ளார். இவருடன் 13 பேர் மந்திரி சபையில் உள்ளனர.

---

உரிமைகள் கிடைப்பதற்கு

# ஆசிரிய சேவைகமிஷன் நியமனம்செய்யவேண்டும்

## வலிகாமம் கிழக்கு தமிழாசிரியர் சங்கம் கோரிக்கை

உரும்பராய், புதன்

''மாணவ ஆசிரியர்கள் நியமன முறையினல் நமது நாட்டின் கல்விநிலை சீர்குன்றி வருகிறது. ஒருபாடசாலையிற் படிப்பிக்கும் ஆசிரியர்கள் யாவரும் பயிற்சி பெற்றவர்களாகவே இருக்க வேண்டும். 1965-ம் ஆண்டுக்கு முன் முதுமுறையட்டவணையின்படியே ஆசிரியர்களுக்குப் பதவி உயர்வுகள் வழங்கப்பட்டன. அந்த முறையை இப்பொழுது கையாளாமையினுல் அனுபவம் வாய்ந்த ஆசிரியர்கள் பலர் பதவி உயர்வு அளிக்கும் விஷயத்தில் புறக்கணிக்கப்பட்டுள்ளனர். முதுமுறையட்டவணையை அடிப்படையாகக்கொண்டுதெரிவு செய்யப்பெற்று, வேண்டுமானல் நேர்முகப் பரீட்சையை நடத்தித் தகுதியானவர்களுக்கே பதவி உயர்வுகள் வழங்குதல்வேண்டும். ஒவ்வொரு உத்தியோகத் துறையில் உள்ளவர்களின் குறைநிறைகளை விசாரிக்க அரசாங்கசேவைக் கொமிஷன் உண்டு. கூடியதொழிலாளர்களாகப் பெரும் பணிபுரியும் ஒரு லட்சத்துக்கு மேற்பட்ட ஆசிரியர்களின் குறைகளை விசாரிப்பதற்கு அரசாங்கம் இதுவரை ஓர் ஆசிரியர் சேவைக் கமிஷனை நியமிக்காமல் இருப்பது துரதிஷ்டவசமானதே. ஆசிரியர் சேவையில் நீண்டகால அனுபவம் நிறைந்த ஆசிரியர்களையும் உள்ளடக்கிய ஆசிரிய சேவைக் கமிஷனை அரசாங்கம் நியமனம் செய்யவேண்டும். அப்படியாக ஓர் ஆசிரியர்சேவைக் கமிஷனைஅரசாங்கம் நியமித்தாலே ஆசிரியர்கள்ஓரளவுக்கேனும் தமது நியாயபூர்வமான உரிமைகளைப் பெற வாய்ப்பு ஏற்படும்.''

சென்ற சனிக்கிழமை நீர்வேலி ல் நடைபெற்ற வலி-கிழக்கு தமிழாசிரியர் சங்க நிர்வாக மகாநாட்டில் மேற்கண்ட தீர்மானம் ஏகமனதாகநிறைவேற்றப்பட்டது.

சங்கத் தலைவர் திரு. த. இ. குமாரசாமி தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் வலி-கிழக்குத் தமிழாசிரியர் சங்கத்தின்கடந்த கால வரலாறுகளையும் வருங்காலத்திட்டங்களையும் உள்ளடக்கிய அறிக்கைகளை காரியதரிசி திரு. அ. பஞ்சாட்சரம் சமர்ப்பித்துப் பேசினுர்,

திரு. க. இ. குமாரசாமி தமது தலைமையுரையின் போது ''ஆசிரியர்களின் நலன் கருதி ஆசிரியர் சங்கங்களின் சம்மேளனம் ஒரு மாபெரும் பொதுக்கூட்டத்தை எதிர்வரும் ஐப்பசி மாதத்தில் நடாத்த இருக்கிறது இக்கூட்டத்தில்ஆசிரியர்களின் இன்றைய கஷ்டநிலைபற்றி மிகவும் விரிவாக ஆராயப்படும். முக்கிய தீர்மானங்கள் நிறைவேறும் ஆசிரியர்களின் பலத்தை எடுத்துக்காட்டவிருக்கும் இப்பொதுக்கூட்டம் சிறப்பாக நடைபெறுவதற்கு சம்மேளனத்தின்அங்கத்துவ சங்கங்கள் தம்மாலியன்ற ஒத்துழைப்பை நல்கவேண்டியது இன்றியமையாததாகும்'' என்று குறிப்பிட்டார்.

ஆசிரியர்களது இன்றைய கஷ்டநிலைகள்பற்றி திருவாளர்கள் பொ. வேலும்மயிலும், க. மார்க்கண்டு, த. மயில்வாகனம் ஆகியோர்கள் குறிப்பிட்டுவிட்டு அவற்றை ஓரளவுக்கு நீக்குவதற்கான வழிவகைகள் பற்றிய ஆலோசனைகளையும் கூறினுர்.

வலி-கிழக்கு தமிழாசிரியர் சங்கச் சார்பில் கோப்பாய் வட்டாரத்தில் வருட இறுதியில் மூன்ரும், நான்காம் வகுப்புப் பரீட்சைகள் நடாத்துவதென்ற பழைய தீர்மானம் ஊர்ஜிதம் செய்யப்பட்டது.

இக்கூட்டத்தில் நிறைவேறிய ஏனைய தீர்மானங்கள் பின்வருமாறு:-

ஓர் ஆசிரியர் குற்றம்செய்தால் பாரபட்சமற்ற முறையில் சம்பந்தப்பட்ட ஆசிரியரை விசாரணை செய்தல் வேண்டும். இதைவிடுத்து ஆசிரிய உலகின் மேலேயே அப்பழியை உயர்தர அதிகாரிகள் சுமத்திப்பத்திரிகைகள்மூலம் செய்தி வெளியிடுவது தவிர்க்கப்படவேண்டும்.

பாடசாலை நாட்கள் முன்பிருந்ததுபோல் 180 நாட்களாகவே இருத்தல்வேண்டும்.

ஆசிரியர்கள் இடமாற்றத்துக்கு உரியவர்களல்லர்.

கஷ்டமான பிரதேசங்களில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு கூடிய வீட்டுவாடகையும் விசேஷ அலவன்சும் வழங்கப்படவேண்டும்.

நடைமுறையில் உள்ள ஆசிரியர்களுக்குரிய சம்பளத் திட்டத்தை மாற்றி உயர்ந்த அடிப்படையில் சம்பளத்தை ஆசிரியர்களுக்குக் கூட்டிக் கொடுக்கவேண்டும்.

---

## சீனஎல்லைக்குள் சோவியத்துருப்பு

பீக்கிங், ஆகஸ்ட் 13

நூற்றுக்கும் அதிகமான சோவியத்துருப்புக்கள் சீன எல்லைக்குள் புகுந்துள்ளதாக சீனச்செய்தி ஒன்று கூறியது இருதரப்பினரும் மோதுண்டதில் சீனர்கள் இறந்தனர்.

இங்குள்ள மாகாணமொன்றில் எல்லைத்தகராறு இருந்துவந்தது. தங்கள் எல்லைக்குள் புகுந்து விட்டதாக இருதரப்பும் பரஸ்பரம் அடிக்கடி குற்றஞ்சாட்டி வந்துள்ளது.

## சங்காபிஷேகம்

நயினுதீவு, புதன்

நயினுதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலய நவோத்ர சகஸ்ர (1009)'சங்காபிஷேகம் வரும் 15-ம் திகதி பகல் 12 மணியளவில் நடைபெறும்.

## ரூபா 100 அபராதம் சாரம் பறி முதல்

யாழ்ப்பாணம், வியாழன்

சுமார் 2000 ரூபா பெறுமதியான 50 பனையகாட் சாரங்களைக் கம்பளைக்குக் கொண்டு செல்ல முயற்சித்த ஒருவர் யாழ்ப்பாணப் புகையிரத நிலையத்தில் பொலிசாரிடம் சிக்கினுர்.

சப்-இன்ஸ்பெக்டர் உரகொட 50 சாரங்களைக் கொண்ட சூட்கேசையும் அந்த சூட்கேசை வைந்திருந்ததாகக் கூறப்படும் ரிச்சாட் என்பவரையும் சுங்கப் பகுதியிடம் ஒப்படைத்தார்.

பகுதி விசாரணை செய்த சுங்க உதவி கலக்டர் திரு. கே. கந்தசாமி, அவருக்கு 100 ரூபா அபராதம் விதித்ததோடு சாரங்களையும் பறிமுதல் செய்ய உத்தரவிட்டார்.

---

'தமிழரசு—காங்கிரஸ் போட்டி ஒருபுறமிருக்க

# பல்கலைக்கழகத்தை உடனடியாக மட்டக்களப்பில் நிறுவவும்'

## ஆட்சிமன்றத்தில் சின்னலெப்பை

கொழும்பு, புதன்

திருக்கோணமலையிலும், யாழ்ப்பாணத்திலும் பல்கலைக்கழகம் நிறுவுவது சம்பந்தமாகத் தமிழரசுக்கட்சிக்கும், தமிழ்க்காங்கிரஸ் கட்சிக்குமிடையில் மாறுபட்ட கருத்து இருந்துவருகிறது. இதனைத் தீர்ப்பதானுல் மட்டக்களப்பில் பல்கலைக்கழகத்தை நிறுவவேண்டும்'' என மட்டக்களப்பு இரண்டாவது எம். பி. ஜனுப் லத்தீப் சின்னலெப்பை இன்று ஆட்சிமன்றத்தில் பேசுகையில் கூறினுர்.

முன்னுள் உள்ளூராட்சி அமைச்சர் செனட்டர் திருச்செல்வம் மட்டக்களப்புப் பகுதிக்கு எதுவுமே செய்யவில்லையென்று கூறிய சின்னலெப்பை, யாழ்ப்பாணத்தில் கிராமசபைகளை அதிகரிப்பதில் அவர் கூடிய அக்கறை காட்டினுர். மாவட்ட சபை வருமென்பதற்காகவே அவர் அவ்விதம் நடந்துகொண்டதாகவும் சின்னலெப்பை கூறினுர்.

நிவித்திகலை எம். பி. திரு. ஹெட்டியாராய்ச்சி பேசுகையில் தமிழரசுக்கட்சியினரின் சில பேச்சுக்கள் சிங்களமக்களுக்கு ஆத்திரமூட்டத்தக்கதாக இருப்பதாகவும், சிங்களக் கட்சிகளுக்குள் என்னதான் வேற்றுமை இருந்தாலும், நாட்டைப் பிரிக்கும் சமஷ்டிக் கட்சியின் விருப்பத்துக்கு எதையும் விட்டுக் கொடுக்கமாட்டார்கள் என்றும் தொடர்ந்து கூறினுர்.

'வரவு-செலவுத்திட்ட அறிக்கை தயாரிக்கும்முறையும், அரசியல் அமைப்பு முறையும்மாற்றி அமைக்கப் படவேண்டுமென்றும், தேர்தலுக்குப்பின் எந்தக்கட்சி ஆட்சிக்கு வந்தாலும் அவர்கள் ஒன்றுசேர்ந்து இதுபற்றி பரிசீலனை செய்துநடவடிக்கை எடுக்கவேண்டுமென்றும் ராஜாங்க அமைச்சர் திரு. ஜே. ஆர். ஜயவர்த்தன பேசுகையில் கூறினுர்.

அரசாங்க ஊழியர்களால் தயாரிக்கப்பட்டுவரும் வரவு-செலவுத் திட்ட அறிக்கையை ஆட்சிமன்றத்தில் வாசிக்கப்படும் போதுதான் அதில் குறிப்பிடப்பட்ட விஷயங்கள்பற்றித் தெரிந்து கொள்ளக்கூடியதாயிருக்கின்றது. இவ்வாருகக் கஷ்டமில்லாமல் தயாரிக்கக்கூடிய வகையில் இது திருத்தியமைக்கப்படவேண்டும் என்றும் திரு. ஜெயவர்த்தன கூறினுர்.

அவர்தொடர்ந்துபேசுகையில், 'வெளிநாட்டு இறக்குமதியைத்தடைசெய்துவிட்டு உள்நாட்டில் உற்பத்திசெய்யும் எந்தவகைப் பொருட்களும் இறக்குமதிபொருட்களைவிட விலைகூடியதாகவே இருக்கும். நம்நாட்டுமக்களுக்கே அப்பணம்போய் சேருகின்றதென்ற நிம்மதி மட்டுமே எமக்கு உண்டுஎன்றும் கூறினுர்.

மினிப்பே எம். பி. திரு. நவரெட்னே பேசியதாவது:...

'தமிழ்காங்கிரஸ், தமிழரசு சண்டைபோடுவதைப் பார்த்தால், இரவில் திருடிய திருடர்கள் பகலில்பங்கு போடும்போது போட்டுக்கொள்ளும் சண்டைபோல இருக்கிறது'

## மாவைசம்பவம்

எஸ். டி. பண்டாரநாயகா:-

மாவிட்டபுரத்தில்உயர் சாதியினருக்கு சாதகமாக பொலிசார் நடந்துகொண்டுள்ளனர். உடனடியாக சமூக குறைபாடுசட்டத்தை தீவிரமாக அமுல் நடத்த வேண்டும்'

'இதற்குப் பதிலளித்துப் பேசிய பிரதமர் டட்லி:-

ஆலய உட்புறக்கதவுகள்எல்லாப் பக்தர்களுக்கும் மூடப்பட்டிருப்பதால் அங்குபாகுபாடு காட்டப்படவில்லை. பொலிசாரும் பாகுபாடின்றி நடந்துகொண்டனர்'.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்


### தேவை

'சேட்' தைப்பதில் நல்ல அனுபவமுள்ள திறமையுள்ள ஆண்கள் தேவை. 18-8-1969ல் காலை 9 மணிக்கும் மாலை 5 மணிக்குமிடையில் தகுந்த நற்சாட்சிப்பத்திரத்துடன் 'சிவா' ஸ்தாபனம், பஸ் நிலையம், சுன்னாகம் என்னும் முகவரிக்கு நேரில் வரவும். 1316

### EDUCATION

Third term begins on 18-8-69. Admission on the 16th and 17th of August. The following classes are provided. G. C. E. (A. L) Sc / Arts / Commerce, G. C. E. (O. L) Sc / Arts / Commerce, Institutes of Book - Keepers London Chamber of Commerce, Institute of Bankers. The Cost and Works Accountants Examination Chartered Secretaries Examinations Postmasters and Signallers. Examination. THE JAFFNA EDUCATION CENTRE 304 / 3 HOSPITAL ROAD, JAFFNA. 1314


## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

### வியாழன் 14—8—69

344 மீ அன் 61 மீ

காலை 6 30 நாதாஞ்சலி, 6-35 சைவ நற்சிந்தனை, 6-40 இஸ்லாமிய நற்சிந்தனை, 7-15 துதிப்பாடல்கள், 7-30 திரைகானம், 8-00 செய்திச் சுருக்கம், 8-03 நிலைய ஒலிப்பதிவு, 8-15 இஸ்லாமியகீதங்கள், 8-30 செய்திச்சுருக்கம்.

344 மீ அன் 49 மீ

பகல் 12-00 செய்திச் சுருக்கம், 12-03 திரைகானம், 1-00 மாதர் கேட்டவை, 1-30 செய்திச் சுருக்கம்.

344 மீ அன் 61 மீ

மாலை 4-25 செய்திச்சுருக்கம், 4-28 சங்கமம், 5-00 செய்திச்சுருக்கம், 5-03 பிறந்த தினவாழ்த்துக்கள், 5-15 இளைஞர் கண்டுபிடிப்புகள், 5-45 படத்திலிருந்து.

இரவு 6-15 பாமாலை 6-30 கிராமசஞ்சிகை, 7-00 செய்திச் சுருக்கம், 7-03 வீணை, 7-35 பேச்சு, 7-45 நேயர் கடிதங்கள், 8-00 செய்திச்சுருக்கம், 8-03 முஸ்லிம்நிகழ்ச்சி, 10-00 நேயர் கேட்டவை, 10-30 செய்திச்சுருக்கம்.

## இலக்கியப் போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், வியாழன்

பருத்தித்துறை மேலைப் புலோலி கலைமதி கலாமன்றம் நடாத்திய இலக்கியப் போட்டிகளின் முடிவுகள் வருமாறு:

கட்டுரை: 1. தங்கராசா, 2. க. சபாபதிப்பிள்ளை, 3. வல்வை க. மனோகரன்.

கவிதை: 1. ந. தங்கராசா, 2. க. மனோகரன், 3. செல்வி. க. தங்கம்மா.

சிறுகதை: 1. வல்வை. க. மனோகரன், 2. ந. தங்கராசா, 3. திருமதி. சித்திரா சக்திவேல்,

நாடகம்: 1. வல்வை ந அனந்தராஜ், 2. மு. சுப்பிரமணியம், 3. மு. சிவகுருநாதன்.

பரிசுகள் நா. கதிரவேற்பிள்ளை சிலைநாட்டுவிழாவையடுத்து நடைபெறவிருக்கும் முத்தமிழ் விழாவில் வழங்கப்படும்.

## தாச்சி சுற்றுப்போட்டி

பூநரி, புதன்

பூநகரி காரியாதிகாரியினால் பூநகரி காரியாதிகாரி பிரிவில் தாச்சிச் சுற்றுப் போட்டி ஒன்று நடத்தஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இப் போட்டி நொக்கவுட் முறையில் நடத்தப்படும். இப் போட்டியில் பங்குபற்றுவதற்கு பல விளையாட்டுக் கழகங்கள் விண்ணப்பித்துள்ளன. திறமையான விளையாட்டுக் கழகத்துக்கு ஒரு வெள்ளிக்கிண்ணமும் திறமான தாச்சிவீரர்களுக்கு ஓர் வெற்றிக் கிண்ணமும் வழங்கப்பட இருக்கின்றது.

## பாராட்டு விழா

மல்லாகம், புதன்

மல்லாகம் கிராம சபைக்கு புதிய தலைவராக தெரிவு செய்யப்பட்டுள்ள திரு. வ. பொன்னம்பலத்தை பாராட்டுமுகமாக இப்பகுதி மக்களால் பாராட்டு விழா ஒன்று நடாத்தப்படவிருக்கின்றது. வருகின்ற வெள்ளிக்கிழமை நடைபெற விருக்கும் இவ் விழாவில் உடுவில் எம். பி. திரு. வீ. தருமலிங்கமும் கலந்து கொள்வார்.


### வெஸ்லி சினிமா

மானிப்பாய்

தினசரி 6-30, இரவு 10-00 ஞாயிறு, போயா 2-30 மணி

ஜெய்சங்கர் - ஜெயலலிதா நடித்த

### பொம்மலாட்டம்

### ராஜா

(யாழ்ப்பாணம்)

சுந்தரராஜன், மனோகர், ராமதாஸ், தங்கவேலு, பத்மினி, பேபி ராணி


## உதய சூரியன் விளையாட்டுப் போட்டி முடிவுகள்

வல்வெட்டித்துறை, புதன்

வல்வெட்டித்துறை உதய சூரியன் கழக வருடாந்த விளையாட்டுப் போட்டியில் மோகனதாஸ் இல்லம் முதலாவதாகவும், இராஜவடிவேல் இல்லம் இரண்டாவதாகவும், குணசுந்தர இல்லம் மூன்றாவதாகவும் வந்தன. வல்வை பட்டினசபை தலைவர் திரு. வி. இரத்தினசபாபதி கழகக் கொடியை ஏற்றிவைத்தார்.

போட்டியில் பரிசு பெற்றவர்கள் விபரம் சில வருமாறு:-

25 மைல் ஸைக்கிள் ஓட்டம்: கே. சிவலிங்கம், ஒன்றரை அந்தர் மூடையை தோழில் சுமந்து ஒருமைல் ஓடுதலில் முதலாவது இடத்தை எஸ். தனபாலசிங்கம் பெற்றார். வினோத உடைப் பேட்டியில் கறுப்பு அடிமைகளும், வெள்ளைக்காரத் துரையும் வேடம் அணிந்த குருநகர் கழகம் முதலாவது இடத்தையும், குடும்பக்கட்டுப்பாட்டினை நினைவூட்டுவண்ணம் வேடம் அணிந்த கோஷ்டி இரண்டாவது இடத்தையும், தலையற்று நடக்கும் மனித முண்டம் வேடம் அணிந்தது மூன்றாவது இடத்தையும் பெற்றன. 10 மைல் மரதன் ஓட்டம் முதலிடம் ஈ. திருநாவுக்கரசு (பண்டத்தரிப்பு) குழந்தைகளின் மூன்றுசில்லு சைக்கிள் ஓட்டம் முதலிடம் செல்வன் ஏ சந்திரமோகன்.

பார்வையாளருக்கானகட்டுமரம் வலித்தல், யந்திரப் படகு ஓட்டுதல் முட்டி உடைத்தல், பாய்மரம் ஏற்றுதல் முதலிய போட்டிகளும் இடம் பெற்றன

பிரதம விருந்தினர்களாக பருத்தித்துறை எம். பி. திரு. க. துரைரத்தினம், பருத்தித்துறை மாவட்ட நீதிபதி திரு. எம். தர்மலிங்கம் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

## புதிய நிர்வாகிகள்

மண்டைதீவு, புதன்

மண்டைதீவு உதயசூரியன் சனசமூக நிலையத்தின் 23வது வருடாந்த பொதுக் கூட்டம் நிலையமண்டபத்தில் தலைவர் சோ சண்முகரத்தினம் தலைமையில் நடைபெற்றது.

புதுவருட நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்

தலைவர்- திரு சோ சண்முகரத்தினம், உபதலைவர்- திரு வீ மாணிக்கவாசகர், இணைச் செயலாளர்கள்- செல்வன் சி வரதலிங்கம், செல்வன் ச இரத்தின

# விவசாயப்படை வீருக்கு காணிவழங்க நடவடிக்கை

யாழ்ப்பாணம், வியா.

விவசாயப்படை வீரர்களுக்கு காணி வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது விவசாயப் படை முகாம்களில் 500 நாட்கள் வேலை செய்து முடித்த வீரர்களின் பட்டியல் ஒன்றை தலைமைப் பீடம் சகல விவசாயப் படை பொறுப்பதிகாரிகளிடமும் கேட்டிருக்கிறது. குறிப்பிட்ட இந்தக்கால எல்லையை முடித்தவர்கள் காணி பெறும் தகுதிக்குள்ளவர்களென செய்திகள் தெரிவிக்கின்றன.

விஸ்வமடுவிவசாயப்படை முகாம் வீரர்கள் பன்னீராயிரம் ரூபாய் மதிப்பிடப்பட்ட வேலையை 9 ஆயிரம் ரூபாய்க்குக் குறைவாகவும், ஒரு வருடத்தில் செய்து முடிக்கக் கூடிய வேலையை ஒன்பது மாதத்துக்கு குறைவாகவும் செய்து முடித்துக் கொடுத்திருக்கின்றனர்.

### வீரர்கள் கவலை

ஒரு குறிப்பிட்ட திகதியில் தமது வேதனம் கிடைப்பதில்லையென விஸ்வமடு விவசாயப்படை முகாம் வீரர்கள் கவலை தெரிவிக்கின்றனர். மற்றைய முகாம்களில் வழங்குவது போல 5-ம். 6-ம் திகதிகளில் வழங்குமாறு இவர்கள் கோருகின்றனர். ......

## பாராட்டு

சுழிபுரம், புதன்

'தமிழக மேல் சபைக்கு தவப்பெரும் குன்றக்குடி அடிகளார் ஓர் அங்கத்தவராக நியமனம் செய்யப்பட்டது பலவகையிலும் போற்றிப் பாராட்டத்தக்கதாகும். நல்லவர்கள் திறமையானவர்கள் நன்கு பயன்படுத்தப்படும் வகையில் ஒரு முன்னோடியாக குன்றக்குடி அடிகளார் நியமனம் செய்யப்பட்டதால் மேல்சபையின் மதிப்பு உயர்வடைகின்றது' என்று தமிழக முதல்வர் கலைஞர் முகருணாநிதிக்கு வழக்கம்பரை தமிழ் மன்றத்தினர் அனுப்பிய பாராட்டுச் செய்தியில் தெரிவித்துள்ளனர்.

## மருத்துவ மாது இல்லை

சுழிபுரம், புதன்

தொல்புரம் கிராமத்திற்கு இதுவரை மருந்துவ மாது எவரும் நியமிக்கப்படாமையால் இப் பகுதி மக்கள் மிகவும் சிரமப்படுகின்றனர். இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் இங்கு கடமையாற்றிய மருத்துவ மாது இடமாற்றம் செய்யப்பட்ட பின்பு அந்தக் காலி ஸ்தானத்திற்கு எவ

## ச. ச நிலைய சமாசம் அங்குரார்ப்பணம்

மல்லாகம், புதன்

கட்டுவன் பாலர் ஞானோதயா வித்தியாசாலை மண்டபத்தில் இம்மாதம் 20-ம் திகதி மயிலிட்டி கிராம சபைப் பகுதி சன சமூக நிலையங்களின் சமாஜம் உதவி உள்ளூராட்சி ஆணையாளர் திரு. ஏ ஏ. யோசேப் தலைமையில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்படும் மயிலிட்டி கிராம சபைத் தலைவர் திரு. வ. கிருஷ்ணசாமி, பலாலி கனிஷ்ட பல்கலைக்கழக உப அதிபர் திரு. கே. சிவபாலன் ஆகியோரும் விழாவில் கலந்து கொள்வர்.

## வேலணை ச. ச நிலையக் கூட்டம்

வேலணை, புதன்

வேலணை கலைமகள் சன சமூக நிலையத்தின் நிர்வாக சபைக் கூட்டம் தலைவர் திரு. ப. அரசரத்தினம் தலைமையில் நடைபெற்றது.

நிலையக் கட்டிடத்தைத் திருத்துவதுபற்றி ஆலோசிக்கப்பட்டது. படக்காட்சி மூலம் நிதி சேகரித்து கட்டிடத்தைத் திருத்துவதெனவும் அங்கத்தவர்களிடம் அங்கத்துவ சந்தாப் பணத்தை வசூலிப்பதெனவும் நிலையத்திற்கு உபவிதி தயாரிப்பதுபற்றியும் தீர்மானிக்கப்பட்டது.

கணக்குப் பரிசோதகராகிய திரு. நா. இரத்தினசிங்கம் தனதிகாரி பதவிவகிக்க வேண்டியேற்பட்டதனால் கணக்குப் பரிசோதகர் பதவி ராஜினாமா செய்யப்பட்டது. ராஜினாமாவையடுத்து திரு. செ. கருணாகரன் அப்பதவிக்கு நியமிக்கப்பட்டார்.

## 39 வருட சேவை

சுழிபுரம், புதன்

முப்பத்தொன்பது வருட ஆசிரிய சேவைக்கு பின்னர் சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரியின் ஆசிரியர் திரு ஐ. செபாஸ்தியாம்பிள்ளை இம்மாதத்துடன் ஒய்வு பெறுகின்றார். இவர் நாவலப்பிட்டி, கொழும்பு, மட்டக்களப்பு ஆகிய பகுதிகளிலும் கடமையாற்றியுள்ளார். இவர் இளவாலை கிராமத்தைச் சேர்ந்தவர்.

## உற்சவங்கள்

உடுவில், புதன்

மாகியப்பிட்டி அங்கணம்மைக்கடவை மீனாட்சி அம்மன் கோவில் வருடாந்த மஹோற்சவம் இம்மாதம் 17-ம்திகதி ஆரம்பமாகிறது. மாத்தனை பிரம்ம ஸ்ரீ. சர்வேஸ்வரக்குருக்கள் இம் மஹோற்சவங்களை நடத்தி வைப்பார்.

சங்குவேலி சிவஞானப் பிள்ளையார் கோவிலின் வருடாந்த மஹோற்சவம் இம்மாதம் 18-ம்திகதி ஆரம்பமாகின்றது இதனை நவாலி பிரம்ம ஸ்ரீ சண்முகரத்தினக் குருக்கள்நடத்தி வைப்பார்.

மேற்படி இரு ஆலயங்களிலும் இம்மாதம் 26 27-ம் திகதிகளில் நடைபெறும் தேர், தீர்த்த உற்சவங்களுடன் விழா பூர்த்தியடையும்.

## 8 ம் வகுப்புப்பரீட்சை

உடுப்பிராய் புதன்

அகில இலங்கைத்தமிழ் ஆசிரியர் சங்கத்தினால் வருடாவருடம் நடாத்தப்படும எட்டாம் வகுப்புப்பரீட்சை இந்த வருடத்திலும் வழக்கம்போல வருட இறுதியில் நடைபெறுவதற்குரிய ஆயத்தங்கள்மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

சென்ற ஆண்டில் நடைபெற்ற குறித்த எட்டாம் வகுப்புப் பரீட்சையிற் சித்தியடைந்த மாணவர்களுக்குரிய தராதரப்பத்திரங்களை உரிய பாடசாலைத் தலைமையாசிரியர்களுக்கு இந்தமாத முடிவுக்குள் அனுப்பிவைப்பதற்குரிய முயற்சிகளில் பரீட்சைக் காரியதரிசி திரு த. இராசேந்திரம் ஈடுபட்டுள்ளார்.

## வீதி அமைப்பு

வேலணை, புதன்

வேலணை முதலாம் வட்டாரத்தில் ஒரு வீதி அமைப்பதுபற்றி ஆலோசிக்கும் பொருட்டு திரு, க. அம்பிகைபதி தலைமையில் கூட்டம் நடைபெற்றது.

வீதி அமைப்பதுபற்றிகூட்டத்திற்குச் சமூகமளித்தவர்களினால் கருத்துக்கள் பரிமாறப்பட்டன

கி. ச. தலைவரையும், வீதி அமையும் காணிச் சொந்தக்காரர்களையும் சந்தித்து அவர்களுடன் இதுபற்றி ஆலோசிப்பதெனவும் தேவைப்படும்போது சிரமதான இயக்க மூலம் செயலில் ஈடுபடுவதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

## சைவ மகாநாடு

## 'கல்வித்துறையில் மாற்றம் ஏற்பட்டுள்ளது'

உடுவில், புதன்

''காலனி ஆட்சிக்காலத்திலிருந்த கல்விமுறை இன்று பெருமளவில் மாற்றமடைந்து விட்டது. கலை, விஞ்ஞானத் துறைகளில்மாத்திரமல்ல, நாட்டு வளர்ச்சிக்கு முக்கியமான தொழில்நுட்பகல்விக்கு அரசாங்கம் முக்கியத்துவம் அளித்து வருகின்றது. தொழில் நுட்பகல்வி பயின்ற மாணவர்கள் அரசாங்கத்தினை எதிர்பார்த்து தொழில் வசதி நாடிநிற்றல் நாட்டின் பொருளாதார வளர்ச்சியை நிச்சயம் வளர்க்கமாட்டாது. தாம்கற்ற கல்வியைப் பயன்படுத்தி நாட்டில் பல சிறு தொழில்களை இளைஞர்கள் செய்தல் அவசியம். தொழில்நுட்பகல்வியை பயில இன்று பல்லாயிரம் மாணவர்கள் முன்வந்திருப்பது நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு ஒரு முன்னோடியாகும்.''

யாழ்ப்பாணம் கனிஷ்ட தொழில் நுட்ப நிலையத்தின் புதிய அதிபராக அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் நியமிக்கப்பட்ட திரு. எஸ். டீ. ஜெயசிங்கம் தொழில்நுட்ப கல்வி பற்றியதமதுகருத்தை இவ்வாறு வெளியிட்டுள்ளார்.

1968-ம் ஆண்டு நவம்பர் மாதம் முதல் இந்த நிலைய அதிபர் திரு. கே. நாகலிங்கம் இளைப்பாறியதைத் தொடர்ந்து மேற்படி நிலையத்தின் பதில் அதிபராக இருந்த திரு எஸ். டீ. ஜெயசிங்கம இதுவரை தற்காலிகஅதிபராகக் கடமையாற்றினார். இம்மாதம் முதல் இவர்நிலையத்தின் அதிபராக பதவி உயர்வு பெற்றார்.

யாழ்ப்பாணம் மத்தியகல்லூரியில 15 வருடங்கள் வரை ஆசிரியராகப் பணியாற்றிய புதிய அதிபர் 1960-ம்ஆண்டுமுதல் யாழ்ப்பாணம் கனிஷ்ட தொழில் நுட்ப நிலைய வணிகத்துறை சிரேஷ்டபோதனாசிரியராகக் கடமையாற்றியுள்ளார். காமன்வெல்த் உபகாரநிதி அடிப்படையில் இங்கிலாந்தில் இவர் வணிகத்துறையில் அண்மையில் விசேஷபயிற்சி பெற்று திரும்பியதும் மேற்படி நிலையத்தின் பதில் அதிபராக நியமனம் பெற்றார்.

## ரூ.75 அபராதம்

வல்வெட்டித்துறை, புதன்

கரணவாயைச் சேர்ந்த க. ஜெயம்என்பவர் அதேஇடத்தைச் சேர்ந்த வி. செல்லத்தம்பிக்கு அடித்துக் காயப்படுத்திய குற்றத்திற்காக பருத்தித்துறை மாஜிஸ்திரேட் திரு. கே. விக்னராசா எதிரியான ஜெயத்திற்கு ரூபா 75 அபராதம் விதித்துள்ளார்

## மகோற்சவம்

அல்லைப்பிட்டி, புதன்

நெடுந்தீவு மேற்கு உயரபுலம் ஐயனார் கோவில் வருடாந்த மகோற்சவம் தீர்த்தோற்சவத்துடன் முடிவுற்றது.

## புதிய நிர்வாகிகள்

யாழ்ப்பாணம், வியாழன்

வண்ணை மத்தியதமிழ்காங்கிரஸ் கிளையின் இவ்வருட நிர்வாக சபை அங்கத்தவர்களாக பின்வருவோர்தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தலைவர்: திரு. வே. பொன்னம்பலம், உபதலைவர்கள்: திரு. எஸ். நடராசா, திரு. எஸ். துரைராசா இணைச் செயலாளர்கள் திரு. மு க, இரத்தினவேலுப்பிள்ளை செல்வன்: பி. பாலச்சந்திரன் பொருளாளர்: செல்வன் கே. வைரவநாதன் உபபொருளாளர்: செல்வன். எஸ். செல்வராசா நிர்வாகசபை அங்


## தேவை

NIQUA—RECORD வாள்தகடு/கையிருப்பு உள்ளவர்கள் பின்வரும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.

**V. சண்முகராஜா**

118, செட்டியார்தெரு, கொழும்பு—11.

டெலிபோன்: 25946

1703

JAFFNA COLLEGE
Undergraduate Department
VADDUKODDAI

Admissions

September 1969

1. G. C. E. (A. L) 1st & 2nd year and Revision courses Arts & Science.
2. G. A. Q.
3. Intermediate Certificate and Diploma in Science (on GSQ and B. Sc. Syllabuses respectively) for Students with Advanced Level background.

Prospectus & pplication Form may be obtained from August


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


வீணை, 7-35 பேச்சு, 7-45
நேயர் கடிதங்கள், 8-00
செய்திச்சுருக்கம், 8-03
முஸ்லிம்நிகழ்ச்சி, 10-00
நேயர் கேட்டவை, 10-30
செய்திச்சுருக்கம்.


தினசரி6-30, இரவு10-00
பிரிபோயா, போயா 2-30மணி
ஜெய்சங்கர் - ஜெயலலிதா
நடித்த
பொம்மலாட்டம்

ராஜா
(யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்
சுந்தரராஜன், மனோகர், ராமதாஸ், தங்கவேலு, பத்மினி, பேபி ராணி
நடித்த
விஜயா: சுரேஷ் கம்பைன்ஸ
குழந்தைக்காக
கதை-வசனம்: துறையூர் மூர்த்தி பாடல்கள்: கவிஞர் கண்ணதாசன்

ராணி
(யாழ்ப்பாணம்)
[தினசரி 4 காட்சிகள்]
சிவாஜி - ஜெயலலிதா
சௌகார் ஜானகி
நடித்த
எங்க ஊர் ராஜா

கெப்பிட்டல் (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) விஜயா மட்டுநகர்)
வெலிங்டன் யாழ்ப்பாணம்) ராஜ் (நீர்கொழும்பு) ஸ்ரீகிருஷ்ணா (திருமலை)
2-30, 6-30, 9-30



எம். ஜி. ஆர்.
★
ஜெயலலிதா
மனோகர், அசோகன், விஜயகுமாரி,
சோ, மனோரமா, கண்ணன்
நடித்த
கணவன்
இசை: எம். எஸ் விஸ்வநாதன்
டைரக்ஷன் ப. நீலகண்டன்


பெற்றது.

புதுவருட நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்

தலைவர்- திரு சோ சண்முகரத்தினம், உபதலைவர்- திரு வீ மாணிக்கவாசகர், இணைச் செயலாளர்கள்- செல்வன் சி வரதலிங்கம், செல்வ இரத்தினகுமார், பொருளாளர்- திரு செ நடராசா. ஆறு பேர் கொண்ட நிர்வாகசபையும் தெரிவுசெய்யப்பட்டது.


வல்வெட்டித்துறை
ரஞ்சனா தியேட்டர்
தினசரி 6-30, 9-30.
பிரிபோயா, போயா காலை10-30
எம். ஜி. ஆர். - ஜெயலலிதா
நடித்த
காவல்காரன்


தொல்புரம் கிராமத்திற்கு இதுவரை மருத்துவமாது எவரும் நியமிக்கப்படாமையால் இப் பகுதி மக்கள் மிகவும் சிரமப்படுகின்றனர். இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் இங்கு கடமையாற்றிய மருத்துவமாது இடமாற்றம் செய்யப்பட்ட பின்பு அந்தக் காலி ஸ்தானத்திற்கு எவரும் நியமிக்கப்படவில்லை. இதுசம்பந்தமாக பொது மக்கள் சுகாதாரப் பகுதியினரை நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுள்ளனர்.



REGAL JAFFNA
Daily4-45,7-00&9-45p.m.
Poya, Pre Poya 4 Shows
ONE HUNDRED
AND
ONE DALMATIANS


ஆசிரிய சேவைக்கு பின்னர் சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரியின் ஆசிரியர் திரு ஐ. செபாஸ்தியாம்பிள்ளை இம்மாதத்துடன் ஓய்வு பெறுகின்றார். இவர் நாவலப்பிட்டி, கொழும்பு, மட்டக்களப்பு ஆகிய பகுதிகளிலும் கடமையாற்றியுள்ளார். இவர் இளவாலை கிராமத்தைச் சேர்ந்தவர்.


MANOHARA
JAFFNA
Daily 4 shows
Kerwin Mathews
as
THE VISCOUNT
(color spy film)
(passes&concessions suspended)



பாழ்.வின்ஸர் வெண்திரையில்
தினசரி 4 காட்சிகள்



★ ஏ வி.எம். ராஜன்
★ புஷ்பலதா
★ சிவகுமார்
★ கீதாஞ்சலி
★ நாகேஷ்
★ அஞ்சலிதேவி
வி.எஸ். ராகவன்
மாஸ்டர்பிரபாகன்
ஆகியோர் நடித்த
பால்குடம்
திரைக்கதைஇயக்குனர் மேற்பார்வை: கிருஷ்ணன் பஞ்சு
அத்துடன் சந்திரனில் முதல் மனிதன் இறங்கி நடந்த அப்பல்லோ-11 காட்சியும் தமிழில் காண்பிக்கப்படுகிறது.


கி. ச. தலைவரையும், வீதி அமைப்பும் காணிச் சொந்தக்காரர்களையும் சந்தித்து அவர்களுடன் இதுபற்றி ஆலோசிப்பதெனவும் தேவைப்படும்போது சிரமதான இயக்க மூலம் செயலில் ஈடுபடுவதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

## சைவ மகாநாடு

கோப்பாய், புதன்

கோப்பாய் திருவருள் தவநெறி மன்றத்தின் 3வது ஆண்டு நிறைவு விழாவும் சைவமகாநாடும் அடுத்த மாத நடுப்பகுதியில் நடக்கவிருக்கிறது.

## அறிமுக விழா

யாழ்ப்பாணம், வியா

'சொக்'கனின் நல்லைநகர் தந்த நாவலர், அறநெறிப் பாமஞ்சரி அறிமுக விழா நாளை மாலை 5 மணிக்கு யாழ். இலக்கிய வட்டத்தின் ஆதரவில் திரு. வி. கந்தவனம் தலைமையில் யாழ் மாநகரசபை பொழுது போக்கு மண்டபத்தில் நடைபெறும்.

## ரூ 500 சன்மானம்

கோட்டை, புதன்

அவிசாவளை பொலிஸ்பகுதியைச்சேர்ந்த பணவலை கொருளை பலநோக்குக்கூட்டுறவுச்சங்க சமாஜத்தின் படோல கிளையில் சென்ற மாதம் 30-ம்திகதி நடைபெற்ற திருட்டு சம்பந்தமாக குற்றவாளிகள் பற்றி தகவல் தெரிவிப்பவர்களுக்கு 500 ரூபா சன்மானம் வழங்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

இது சம்பந்தமான தகவல்களை உடனே சமீபத்திய பொலிஸ் நிலையத்துக்குதெரிவிக்கும்படி பொதுமக்கள் கேட்கப்பட்டுள்ளனர்

## இராணுவத்தினர் மீதானவழக்கு ஒத்திவைப்பு

வல்வெட்டித்துறை, புதன்

பலாலி இராணுவ முகாமைச் சேர்ந்த இராணுவ பொலிஸ் சார்ஜண்ட் எஸ். ஜி.டி.ஈ. சில்வா செலுத்திச் சென்ற இராணுவ ஜீப்வண்டியை சந்தேகத்தின் பேரில் வல்வெட்டித்துறைப் பொலிசார் தடுத்துநிறுத்தியபோது நிறுத்தாது செலுத்திச் சென்றதாகப்பொலிசாரால் குற்றம் சாட்டித் தொடரப்பட்ட வழக்கை பருத்தித்துறை மாஜிஸ்திரேட் திரு. கே. விக்னராசா விசாரணைக்காக இம்மாதம் 31-ந் திகதி ஒத்திவைத்துள்ளார்.

செய்யப்பட்டுள்ளனர்.

தலைவர்: திரு.வே. பொன்னம்பலம், உபதலைவர்கள்: திரு. எஸ்.நடராசா, திரு. எஸ்.துரைராசா இணைச் செயலாளர்கள் திரு.மு க, இரத்தினவேலுப்பிள்ளை செல்வன்: பி.பாலச்சந்திரன் பொருளாளர்: செல்வன் கே. வைரவநாதன் உபபொருளாளர்: செல்வன். எஸ். செல்வராசா நிர்வாகசபை அங்கத்தவர்கள்: திரு. க.ஆ.அம்பலவாணர், செல்வன். தி.மகேந்திரராசா, பா. சிவகணநாதன், சபா. செந்தில்ராசர், ஆர். வன்னியசூரியர், எம். மகாலிங்கம், சோ. சண்முகநாதன், சோ. சிவராஜசிங்கம்.


Science.
2. G. A. Q.
3. Intermediate Certificate and Diploma in Science (on GSQ and B. Sc. Syllabuses respectively) for Students with Advanced Level background.
Prospectus & pplication Form may be obtained from August 18 by forwarding a stam ed and self-addressed lo g envelope and postal order f r Re. 1/-
REGISTRAR
1699


# இன்றைய பலன்

சோதிடக்கலாநிதி திருமலை க. வேலுப்பிள்ளை

ஆடி மாதம் 30 ந் திகதி (14-8-69)

**மேஷம்-** பிதா வழியிலிருந்து மகிழ்ச்சிகரமான செய்திக்கு இடமுண்டு, தெய்வ நம்பிக்கையில் அதிக ஆர்வம் ஏற்படும். புண்ணிய காரியங்களில் மனம் நாடும் நீண்டநாள் மனக்குறை இன்று நிவர்த்தியாகும்.

**ரிஷபம்-** தொழில்துறையில் முன்னேற்றம் தென்படும். மேலதிகாரிகளின் ஆதரவு தாராளமாகக் கிடைக்கும். வணிகத்துறையில் புதிய தொடர்புகள் ஏற்படும். சிலருக்கு நன்மையான இடமாற்றமுமுண்டு.

**மிதுனம்-** நீண்டநாள் எதிர்பார்த்த நிதிவசதி இன்று கிடைக்கலாம் வாழ்க்கை திருப்திகரமாக இருக்கும். பிள்ளைகளின் நடவடிக்கைகள் பெருமை தரும். சுற்றுடலின் வாழ்த்தும் உண்டு.

**கடகம்-** சிந்தனைகளின் தாக்குதல் உங்கள் உடல் நிலையைப் பாதிக்கும். மனதில் அமைதி குன்றும். திடீர் முடிவுகளைத் தவிர்த்துக்கொள்ளவும். தொழில் துறையிலும் தொல்லைகளுக்கு இடமுண்டு.

**சிம்மம்-** இன்னலின் பின்னலால் இதய பாரம் ஏற்படும். சிறு விடயங்களுக்குக்கூட குறை கேட்க நேரிடலாம். பெரியார் ஒருவருடன் அபிப்பிராய பேதம் தோன்றும். நாவடக்கம் நன்று.

**கன்னி-** பணவிவகாரத்தில் திருப்திகரமான நிலை தென்படும். வசீகரப் பேச்சினால் மற்றவர்களைச் சொக்கவைப்பீர்கள். மேடைப்பேச்சாளர்கள் பெரும் புகழ் அடைவர். சுபதினம்.

**துலாம்-** பக்கத்திலேயே படுகுழி தோண்டுவதற்கு எதிரிகள் முனைவர். பண விவகாரத்தில் மோசடி நடக்கலாம் ஆணவப் போக்கினால் ஆபத்துக்கள் ஏற்படலாம். அடக்கம்வேண்டும்.

**விருச்சிகம்-** ஆராய்ச்சிகளில் அதிக ஆர்வம் ஏற்படும். கலைஞர்களுக்கு முன்னேற்றம் தென்படும். வாகன உரிமையாளர்களின் ஆதாயம் பெருகும். தாய்வழி மூலம் தனவரவுக்குமிடமுண்டு

**தனுசு-** காதலர்கள் வாழ்க்கையில் கனிவான சம்பவங்கள் இடம்பெறும். இனத்தவர்களின் ஆதரவு தாராளமாகக் கிடைக்கும் நீண்டபிரயாணம் குறித்து திட்டமிடப்படலாம் நல்லநாள்

**மகரம்-** வழக்கு விவகாரங்களின் மூலம் பணம்செலவாகும். எதிர்பாராத விடயத்தில் தடை ஏற்படலாம் அபாயகரமான தொழில் புரிபவர்கள் மிகவும் நிதானத்துடன் நடந்துகொள்ளவேண்டும்.

**கும்பம்-** பெண்களுடனான தொடர்புகள் பெருகும், பிரம்மச்சாரிகள் வாழ்க்கையில் காதல் கணை தாக்கும். கவர்ச்சிப் பொருட்களில் அதிக ஆர்வம் ஏற்படும். மன நிறைவும் ஏற்படும்.

**மீனம்-** நம்பிக்கை மோசடி மூலம் நலிவுகள் தென்படும். நண்பர்களின் தொல்லைகள் அதிகரிக்கும். தொழில் புரியுமிடத்தில் மேலதிகாரியின் கண்டிப்புக்கு இலக்காகலாம். நிதானம் நன்று


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தென் மேற்கு ஆபிரிக்காவிலிருந்து

# ஒக். 4-ம் திகதிக்குமுன் தென்ஆபிரிக்கா விலகிச் செல்லவேண்டும்

## மீறினல் பாதுகாப்புசபை நடவடிக்கை எடுக்கும்

வாஷிங்டன், ஆகஸ்ட் 3

**மேற்கு ஆபிரிக்காவில் ஆக்கிரமிப்பைக் கைவிட்டு விரைவில் தென்னுபிரிக்கா வெளியேறிவிடவேண்டும். இல்லையென்றுல் ஐ. நா. பாதுகாப்புச்சபை தென்னுபிரிக்காமீது தண்டனை நடவடிக்கைகள் எடுப்பதுபற்றி ஆலோசனை செய்யும்.**

தென்னுபிரிக்காவை மேற்காபிரிக்காவிலிருந்து வெளியேறும்படி வற்புறுத்தும் தீர்மானம் நேற்று ஐ நா. பாதுகாப்புச் சபையில் நிறைவேற்றப்பட்டது.

இத்தீர்மானம் ஆசிய ஆபிரிக்க லத்தீன் அமெரிக்க நாடுகளால் தாக்கல் செய்யப்பட்டிருந்தது. பதினெரு நாடுகள் தீர்மானத்தை ஆதரித்து வாக்களித்தன. எதிர்த்து ஒருநாடும் வாக்களிக்கவில்லை. ஆனுல் அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ், பின்லாந்து போன்ற நாடுகள் வாக்களிப்பில் கலந்துகொள்ளவில்லை.

தென்னுபிரிக்கா மேற்கு ஆபிரிக்காவிலிருந்து அக்டோபர் 4-ம் திகதிக்குள் வெளியேறிவிடவேண்டும், அப்படிச் செய்யாவிட்டால் அதன்மீது என்ன நடவடிக்கை எடுப்பது என்பது பற்றி பாதுகாப்புசபை கூடி முடிவெடுக்க வேண்டும் என்று இந்தத்தீர்மானம் கூறுகின்றது. ஏற்கனவே தென்னுபிரிக்காமீது பொருளாதாரத் தடை விதிப்பதற்கான தீர்மானத்தையும் அமெரிக்கா, பிரிட்டன் போன்ற நாடுகள் ஆதரிக்க மறுத்துவிட்டன.

மாநிலசுயாட்சிகோரி

# எல்லா மாநிலங்களும் சேர்ந்து போராடத் திட்டம்

## ம. பொ. சி. யை பொறுத்திருக்க கோருகிறர் தமிழ்நாடு முதல்வர்

சென்னை, ஆகஸ்ட் 13

தமிழரசுக் கழகத் தலைவர் திரு. ம. பொ. சிவஞானகிராமணியார் நடத்தவிருக்கும் சுயாட்சிப் போராட்டத்தை தள்ளி வைக்கும்படி முதல்வர் திரு, மு. கருணநிதிகேட்டுக் கொண்டிருக்கிறர்

சேலத்தில் நடைபெற்ற ஒரு கூட்டத்தில் பேசிய முதல்வர் சுயாட்சிப் போராட்டத்தை ஒத்திவைக்க வேண்டியதுபற்றி குறிப்பிட்டார். அவர் கூறியதாவது:

வருகிற20-ந்திகதி மாநில சுயாட்சிப் போராட்டம் நடத்தப் போவதாக தமிழரசு கழகத் தலைவர் ம.பொ சிவஞானம் அறிவித்திருக்கிறர் சுயாட்சி போராட்டத்துக்கு தி.மு. கழகப் பக்கத் துணையாகவே இருக்கிறது. நான் முதலமைச்சராக தேர்ந்து எடுக்கப்பட்டபின் டெல்லி சென்றபோது அங்கு நிருபர்கள் என்னை 'சுயாட்சி' பற்றி கட்டார்கள் நான் அவர்களிடம் ''வெளிநாட்டு உறவு, பாதுகாப்பு இவைகளை டெல்லி சர்கார் வைத்துக் கொண்டு மற்ற அதிகாரங்களை மாநிலங்களுக்குப்பிரித்துக் கொடுக்கவேண்டும்'' என்று கூறினேன். அரசியல் சட்டத்தை திருத்துவதன்மூலம் என்ன என்னஅதிகாரங்களைப் பெறலாம் என்று ஆராய்வதற்கு 3 பேர்கொண்ட குழு அமைக்க திட்டமிட்டிருக்கிறேம்.

தற்போது லட்சுமணசாமி முதலியார் பழைய நீதிபதி ராஜமன்னர் ஆகிய 2 பேர் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கிறர்கள். இன்னும் ஒருவரை சிலநாட்களில் தேர்ந்தெடுத்தறிவிப்போம். அவர்கள் 3 பேரும் அரசியல் சட்டத்தை திருத்துவதன் மூலம் என்ன என்னஅதிகாரங்கள் கிடைக்கும் என்பதை பரிசீலனை செய்து அறிவிப்பார்கள்.

இதன் மூலம் மற்ற மாநிலங்களின் ஆதரவையும் திரட்டி டெல்லி அதிகாரங்களைப்பிரித்து கொடுக்கும்படி கேட்கவேண்டும் இதை டில்லி அரசு கேட்காவிட்டால் எல்லோரும் ஒன்று சேர்ந்து போராடுவோம் அதுவரை ம பொ. சிவஞானம் சுயாட்சி போராட்டத்தை ஒத்தி வைக்க வேண்டும்.

# தமிழ் நாட்டு செய்திக் கோர்வை

### ரூ, 20 கோடிக்கு கடன்

தமிழ்நாடு அரசு ரூ 20 கோடிக்கு புதிதாக கடன் எழுப்புகின்றது. பாசனப் பணிகள், தொழில் அபிவிருத்தி ஆகியவற்றுக்கு இக்கடன் மூலம் பெறப்படும் தொகை பயன்படுத்தப்படும் தமிழ்நாடு மின்சார போர்டு. உள்ளூராட்சி மன்றங்கள், விவசாயிகள் ஆகியவர்களுக்கு கடன் கொடுக்கவும் இப்பணம் பயன் படுத்தப்படும் இந்தக்கடன் திட்டத்தில் தாராளமாகப் பணம் போகும்படி தமிழ் நாடு தொழில் அதிபர்களையும் பாங்கர்களையும் தமிழ் நாடு நிதியமைச்சர் கேட்டிருக்கிறர்

### காமராஜர் பார்த்தார்

வேலூர் கிறிஸ்தவ வைத்திய ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றுவரும் ஈ. வெ. ரா. பெரியாரை காங்கிரஸ் தலைவர் காமராஜர் போய்ப்பார்த்தார். காங்கிரஸ் கட்சியில் குழப்பம் ஏற்பட்டிருப்பதுபற்றி பெரியார் காமராஜரிடம் விசாரித்தார்.

### ஸ்ரீகாஞ்சி ஆசார்யார்

காஞ்சிகாமகோடி பீடாதிபதி ஜதக்குரு ஸ்ரீசங்கராச்சாரிய சுவாமிகள் இன்னும் மௌன விரதம் அனுஷ்டித்து வருகிறர். என்றுலும் அடியார்களுக்கு ஜாடையாக அனுக்கிரகித்து வருகிறர். காஞ்சிபுரத்தில் ஆசார்யாரும் புதுப்பெரியவான் ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி சுவாமிகளும் சாதுர்மாஸ்ய விரதத்தையும் வியாச பூஜைகளையும் நடத்திவருகிறர்கள். திரள்திரளாக பக்தர் அவர்களைத் தரிசித்துவருகிறர்கள்.

### கம். பக்கிரிசாமி கொலை வழக்கு

சென்றவருடம் சிக்கில் தி. மு. க. தொழிலாளர் பி. கணபதி, அவருடைய சகோதரர் மாரியப்பன் மற்று ஆறுபேர் சேர்ந்து பக்கிரிசாமி, காளியப்பன், ஐயாக்கண்ணு ராமையன் ஆகிய இடதுசாரிக் கம்யூனிஸ்ட் தொண்டர்களைப் பயங்கரமாகத் தாக்கியதாகவும் பக்கிரிசாமியைக் கொன்றதாகவும் தாக்கல் செய்யப்பட்டிருந்த வழக்கில் எதிரிகள் எல்லோரும் விடுதலை செய்யப்பட்டனர். ஆவரணி என்ற இடத்தில் இந்தக்கலவரம் நடைபெற்றது

### கேரள முதல்வருக்கு கருணநிதி ஆசி

சுகவீனம் உற்றிருக்கும் கேரள முதல் அமைச்சர் திரு. நம்பூதிரி பாட்டுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு. கருணநிதி விரைவில் குணமடைய வேண்டுமென்று ஆசி கூறி செய்தியனுப்பியிருக்கிறர். கேரள முதன்மந்திரி வயிற்றுவலிக்கு சிகிச்சை பெறுவதற்காக கிழக்கு ஜெர்மனிக்கும் போகவிருக்கிறர்.

### அண்ணு பிறந்தநாள்

காலஞ்சென்ற தமிழ்நாடு முதல்வர் அறிஞர் அண்ணுவின் 61-வது பிறந்த தினத்தை தமிழ்நாட்டில் ஒருமாதம் கொண்டாடுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன.

### தங்கக் கிரீடம்

தி. மு. க தலைவராகத் தெரிவுசெய்யப்பட்டதையொட்டி தமிழ்நாடு முதல்வர் திரு. மு. கருணநிதியைப் பாராட்டுவதற்காக தர்மபுரி மாவட்ட தி.மு. க. கிளை நடத்திய கூட்டத்தில் அவருக்கு தங்கக்கிரீடம் சூட்டப்பட்டது.

1972-ல் நடக்கும் தேர்தல் நிதிக்காக இந்தக்கிரீடத்தை பொருளாளர் எம். ஜி. ஆரிடம் கொடுக்கப்போவதாக கருணநிதி அறிவித்தார்.

இந்தக்கிரீடத்தின் எடை 27 பவுண். மதிப்பு 3000 ரூபாய்க்குமேல். இந்தக்கூட்

வங்கி தேச உடைமை

# பிரதமர் இந்திரா திட்டத்துக்கு தமிழ் நாடு அரசுபூரண ஆதரவு

சென்னை, ஆகஸ்ட் 13

வங்கிகளைத் தேச உடைமையாக்கியதற்காக பிரதமர் இந்திரா காந்தியை பாராட்டியும், இந்தத் திட்டத்துக்குத் தமது பூரண ஆதரவைத் தெரிவித்தும் தமிழ் நாடு முதல்வர் பாரதப் பிரதமர் திருமதி இந்திரா காந்திக்கு கடிதம் வரைந்துள்ளார்.

இந்த முயற்சிக்கு எமது பூரண ஒத்துழைப்பைக் கொடுப்போம் என்று கருணநிதி தெரிவித்துள்ளார்.

சுதந்திரம் கிடைத்த பின்னர் மேற்கொள்ளப்பட்ட மிகத் துணிச்சல் மிக்க நடவடிக்கை இதுவென்று பாராட்டியுள்ள திரு கருணநிதி மாநில அரசுகளும் இதில் போதிய பங்குபெறுவதற்கு ஏற்பாடு செய்யும்படி கேட்டிருக்கிறர் தேச உடமையாக்கப்பட்ட வங்கிகளுக்கு மானிய ஆலோசனை சபைகள் ஏற்படுத்தி அவைகளில் மாநில அரசுகளின் பிரதி நிதிகளும் அங்கம் வகிக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டிருக்கிறர்.

வட அயர்லாந்தில்

# கிறிஸ்தவர்களுக்கிடையில் மீண்டும் கோஷ்டி மோதல்

லண்டன், ஆகஸ்ட்.13

வட அயர்லாந்தில் புரட்டஸ்தாந்து கிறிஸ்தவர்களுக்கும் கத்தோலிக்கர்களுக்குமிடையில் ஏற்பட்ட ஒரு கைகலப்பின் போது நூற்றுக்கு மேற்பட்டவர்கள் காயமடைந்தார்கள். இவர்களில் 90 பேர் பொலிஸ் கான்ஸ்டபிள்கள்.

புரட்டஸ்தாந்து ஊர்வலமொன்றின் மீது நடத்தப்பட்ட தாக்குதல் ஒன்றைத் தொடர்ந்து, கோஷ்டி மோதல் ஏற்பட்டது. லண்டன் டில்லி நகரில். சுமார் எட்டு மணி நேரம் போராட்டம் நீடித்தது. தெருக்களில் ஓடிக் கொண்டே இருதரப்பாரும் சண்டையிட்டார்கள், பொலிசார் கண்ணீர் குண்டுகளைவீசியும் தடிகளால் அடித்தும் அமைதியை நிலைநாட்டினர்கள்.

# இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனத்தின் சாதனை

திருக்கோணமலை, புதன்

இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் இவ்வருடம் என்றுமில்லாத அளவு கூடுதலான புதிய வாடிக்கையாளர்களைச் சேர்த்துக்கொண்டது. இவ்வருடத்தின் முதல் 6 மாதங்களிலேயே பதினென்றரை கோடி ரூபாய்க்கான காப்புறுதிப் பத்திரங்களை வழங்கி உள்ளது. 1968-ம் ஆண்டு இக்கூட்டுத்தாபனத்தின் சிறந்த ஒரு ஆண்டாக இருந்தது. இந்த ஆண்டிலே இருந்த தொகையை விட 4·1 கோடி ரூபாய்க்கு அதிகப்படியான காப்புறுதிகளை இந்த ஆண்டிலே செய்திருக்கிறது. இந்த ஆண்டிலே சென்ற ஆண்டைவிட 6000 வாடிக்கையாளர்கள் கூடுதலாகச் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். இவர்களால் சுமார் 16,000 ரூபாவுக்கு ஈடான காப்புறுதிகள் செய்யப்பட்டுள்ளன. திருக்கோணமலை, அனுராதபுரம், மாத்தளை, கேகாலை, கண்டி ஆகிய இடங்களில் மட்டும் இருந்தே 0.4 கோடி ரூபாவுக்கு அதிகப்படியாகக் காப்புறுதிகள் செய்யப்பட்டுப் பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

# இரு கி. சேவையாளர் உட்பட மூவர் வேலை நீக்கம்

## சிங்களப்பரீட்சைக்குத் தோற்றவில்லையாம்

முல்லைத்தீவு, புதன்

சேவையில் சேர்ந்த காலம் முதல் இதுவரை சிங்களப் பரீட்சைகளுக்குத் தோற் மூவருமே பதவியிழந்தவர்களாவர்.

1968-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 31-ம் திகதியுடன் [illegible] பதவியிழக்கவிருந்த இவர்

### மாவிட்டபுரத்தில் தூக்குக் காவடி

மல்லாகம். புதன்

மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் தேர்த் திருவிழா தினத்தன்று தூக்குக் காவடி எடுத்து பக்தர் ஒருவர் தமது நேர்த்திக்கடனை நிறைவேற்றினர்.

குரும்பசிட்டி முத்துமாரி அம்பாள் ஆலயத்திலிருந்து திங்கட்கிழமை நண்பகல் 12 மணியளவில் ஆரம்பமாகிய தூக்குக் காவடி ஊர்வலம் மாலை3–30மணிக்கு கோவிலை சென்றடைந்தது. குரும்பசிட்டியைச்சேர்ந்த மு. தம்பிராசா என்பவரே தூக்குக் காவடி எடுத்து தமது நேர்த்திக் கடனை நிறைவேற்றியவராவர். காவடி ஊர்வலம் அலங்கரிக்கப்பட்டடிராக்ரர் வண்டியில் கட்டுவன், தெல்லிப்பழை ஆகிய பகுதிகளின் ஊடாக சென்றபோது ஏராளமான பக்தர் வீதிகளில் குழுமி நின்று பக்தியுடன் ஆசிர்வாதம் செய்தனர்.

### வாலிபர் 'மகாநாட்டு'க்கு முற்றுப் புள்ளி

மட்டுவில், புதன்

தினமும் மாலை முதல் இரவுவரை மடத்தடி சந்திமதகில் ஏறியிருந்து கூட்டம் கூடி திட்டம் தீட்டும் வாலிபர்களின் மகாநாட்டிற்கு நேற்று மாலை முற்றுப்புள்ளி வைக்கப் பட்டது.

இந்த வாலிபர்கள் இச்சந்தியில் நடத்தும் 'மகாநாடு' காரணமாக இப்பகுதியில் உள்ள தோட்டங்களில் காய்கறி வகைகள் திருடப்படுவதாகவும் விவசாயிகள் பொலிசாருக்கு கொடுத்த தகவலைத் தொடர்ந்து பொலிசார் இதற்கு முற்றுப்புள்ளி வைத்தனர். இனிமேல் இரவு வேளையில் இங்கு நடமாடும் வாலிபர் மீது பொலிசார் தீவிர கண்காணிப்பு செலுத்தவுள்ளனர்.

### நிவாரணம் கிடைத்தது

வவனியா, புதன்

கடும் வரட்சியால் பாதிக்கப்பட்டுத் தண்ணீரின்றிக் கஷ்டப்படும் பாவற்குளம், புதுக்குடியிருப்பு ஆகிய பகுதிகளுக்கு வவனியா மாவட்ட அரசாங்க அதிபர் திரு பி. ஸி. பெரேரா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டார் அவர் கூறியதாவது:
வருகிற 20-ந்திகதி மாநில சுயாட்சிப் போராட்டம் நடத்தப் போவதாக தமிழரசு கழகத் தலைவர் ம.பொ. சிவஞானம் அறிவித்திருக்கிறார் சுயாட்சி போராட்டத்துக்கு தி.மு. கழகம் பக்கத்

திருத்துவதன்மூலம் ... என்ன அதிகாரங்களைப் பெறலாம் என்று ஆராய்வதற்கு 3 பேர்கொண்ட குழு அமைக்க திட்டமிட்டிருக்கிறோம்.
தற்போது லட்சுமணசாமி முதலியார் பழைய நீதிபதி ராஜமன்னார் ஆகிய 2 பேர்

டால் எல்லோரும் ஒன்று சேர்ந்து போராடுவோம் அதுவரை ம. பொ. சிவஞானம் சுயாட்சி போராட்டத்தை ஒத்தி வைக்க வேண்டும்.

ளாக பக்தர் அவர்களைத் தரிசித்துவருகிறார்கள்.

## கம். பக்கிரிசாமி கொலை வழக்கு

சென்றவருடம் சிக்கில் தி. மு. க. செயலாளர்

---

### காங்கிரஸ்கட்சி நெருக்கடி

# ஜனாதிபதி தேர்தலில் சுதந்திரமாக வாக்களிக்க அனுமதி தேவையாம்

## ஜகஜீவன்ராம் கோஷ்டியின் கோரிக்கை

புதுடில்லி, ஆகஸ்ட் 13

ஜனாதிபதி தேர்தலில்காங்கிரஸ் ஆட்சிமன்ற உறுப்பினர்களையும் காரியக் கமிட்டி அங்கத்தவர்களையும் தம் இச்சைபோல் சுதந்திரமாக வாக்களிக்க அனுமதிக்கும்படி காங்கிரஸ் தலைவர் திரு. நிஜலிங்கப்பாவுக்கு காரியக் கமிட்டி' உறுப்பினர்கள் திரு. ஜகஜீவன் ராமும் பகிருதீன் அலி அகமத்தும் கடிதம் எழுதியிருக்கிறார்கள்.

தாங்கள் ஏற்கனவே எழுதிய கடிதத்துக்கு திரு நிஜலிங்கப்பா சரியான விளக்கம் தரவில்லையென்று அவர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர். ஜனசங் சுதந்திராக் கட்சிகளுடன் திரு நிஜலிங்கப்பா நடத்திய பேச்சுவார்த்தைகள் எந்த அடிப்படையில் எந்த முயற்சியில் நடைபெற்றன என்பதை அவர் விளக்கவில்லையென்று இருவரும் குறிப்பிட்டிருக்கிறார்கள். திரு. காமராஜ் காங்கிரஸ் தலைவராகவிருந்த பொழுது ஒரு ஜனாதிபதி தேர்தல் நடைபெற்றது அப்பொழுது அவர் இவ்வாறு பேச்சுவார்த்தைகளில் ஈடுபடவில்லையென்று அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

கம்யூனிஸ்டுகள் அரசின் வங்கிதேச உடைமையை ஆதரிக்கிறார்கள் என்றால் அவர்களும் அதனை விரும்புவதே காரணமயா இருக்கலாம், அதற்கு வேறு காரணம் எதுவும் இல்லையென்று அவர்கள் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள்.

கட்சியின் மீது தங்களுக்கிருக்கும்விசுவாசத்தை உறுதிப்படுத்தியுள்ள திரு ஜகஜீவன் ராமும், பக்ருதீன் அலி அகமத்தும் ஜனாதிபதி தேர்தலில் சுதந்திரமாக வாக்களிக்க அனுமதிப்பதே விளைவுகள் மோசமாகாமல் இருக்க வழிவகுப்பதாகும் என்று வலியுறுத்தியுள்ளனர். ஜனாதிபதி தேர்தலில் சுதந்திரமாக வாக்களிக்க திரு சஞ்சீவ ரெட்டி என்ற அங்கத்தவர் திரு. நிஜலிங்கப்பாவிடம் அனுமதி கோரியிருந்ததையும் அவர் ஏற்கனவே நிராகரித்து விட்டார்.

### சூடுபிறக்கிறது

ஜனாதிபதி தேர்தல்நடைபெற இன்னும் சில தினங்களே உள்ளன. இதற்குக் காங்கிரஸ் கட்சி உறுப்பினர்களுக்கிடையில் உருவாகியுள்ள கருத்து வேறுபாடுகளை நீக்கிஒரு முகப்படுத்துவதற்கு முக்கிய தலைவர்கள் முயன்று கொண்டிருக்கிறார்கள்.

காங்கிரஸ் கட்சியில் திருமதி காந்தியை ஆதரிப்பவர்கள் என்று கூறப்படும் ஒரு பகுதியினர் பெரியதலைவர்களான திரு நிஜலிங்கப்பா, பாட்டீல், தேசாய் போன்றவர்களின் போக்கை மிகவும் சந்தேகக் கண்ணோடு நோக்கத் தொடங்கியுள்ளனர். ஜனசங் சுதந்திராக் கட்சிகளுடன் திரு நிஜலிங்கப்பா அண்மையில் பேச்சுக்கள் நடத்தியது குறித்து பெரிதும் அதிருப்தி நிலவுகின்றது.

சுதந்திரா, ஜனசங் கட்சிகளுடன் சேர்ந்து கூட்டு அரசாங்கம் ஒன்றை அமைக்கவும் திருமதி காந்தியின் கோஷ்டியை வெளியேற்றி விடவும் முயற்சிகள் நடப்பதாக சிலர் கருதுகின்றனர்.

இதுபற்றி காங்கிரஸ்தலைவர் திரு நிஜலிங்கப்பா இது விஷமத்தனமானது என்றும் ஜனாதிபதி தேர்தலைத் தவிர வேறு விஷயங்களைப்பற்றித் தாம் வேற்றுக் கட்சிகளுடன் ஆலோசித்ததில்லையென்றும் கூறியிருக்கிறார்.

கட்சியின் ஒழுங்கு விதிகளுக்கமைய நடந்துகொள்ளாமைக்காக ஏன் நடவடிக்கை எடுக்கக் கூடாதுஎன்பதை விளக்கும்படி கோரி திருமதி தாராகேசரிசின்ஹாவுக்கும் திருமதி கிருபளானிக்கும் திரு நிஜலிங்கப்பா கடிதம் எழுதியிருக்கிறார்.

---

## உலக்கையால் காயமுற்றவருக்கு ரூபா 100

வல்வெட்டித்துறை, புதன்

கரவெட்டி கிழக்கைச் சேர்ந்த வ. ஆள்வான் என்பவர் புலோலி கிழக்கைச் சேர்ந்த ஆள்வான் கணபதிக்கு உலக்கையால் அடித்து வலதுகையில் படுகாயம் விளைவித்ததாக பொலிசாரால் குற்றம் சாட்டித் தொடரப்பட்ட வழக்கு பருத்தித்துறை மாஜிஸ்திரேட் திரு. கே. விக்னராசா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

விசாரணையின் பின்னர் மாஜிஸ்திரேட் எதிரியான ஆள்வானைக் குற்றவாளியாகக் கண்டு காயமடைந்தவருக்கு ரூபா 100 கொடுக்கும்படியும் ஒருவருட நன்னடத்தைப் பிணையில் செல்லுமாறும் உத்தரவிட்டுள்ளார்.

## வடபகுதிக்கு வரும் வெளிநாட்டு தூதுவர்கள்

மல்லாகம், புதன்

மல்லாகம் சன்மார்க்கசன சமூக நிலையத்தின் பத்தாவது ஆண்டு நிறைவு விழா இம்மாதம் 27ம் திகதி மல்லாகம் கிராமசபைத் தலைவர் திரு. வி. பொன்னம்பலம் தலைமையில் நடைபெறும். கிழக்கு ஜேர்மனி ஸ்தானிகர் திரு.கே, பொம்பெல் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளும் இவ் விழாவில் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும்.

செக்கோஸ்லவாக்கியா உதவி ஸ்தானிகர் திரு கொலின்ஸ்கீ இம்மாதம் 16-ம் திகதி யாழ்ப்பாணம் விஜயம் செய்வார், மூன்று தினங்கள் இங்கு தங்கவிருக்கும் இவர் மல்லாகம்கிராம சபை அலுவலகத்தில் நடைபெறும் நண்பர்கள் கலந்துரையாடல் நிகழ்ச்சியில் கலந்து கொள்வதுடன் வடபகுதியில் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த இடங்களையும் நேரில் சென்று பார்வையிடுவர்.

---

## பனை விழுந்து குழந்தைகள் காயம்

வல்வெட்டித்துறை, புதன்

பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த கான்ஸ்டபிள் திரு. கருணரத்தினம் என்பவரின் வீட்டின் மேல் பனைமரம் ஒன்றுவிழுந்ததால் அவரது 4 மாதம் கொண்ட இரணைப்பிள்ளைகள் இரண்டும் படுகாயம் அடைந்து மந்திகைஅரசினர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்கள்.

---

கூட்டப்பட்டது.

1972-ல் நடக்கும் தேர்தல் நிதிக்காக இந்தக்கிரீடத்தை பொருளாளர் எம். ஜி. ஆரிடம் கொடுக்கப்போவதாக கருணாநிதி அறிவித்தார்.

இந்தக்கிரீடத்தின் எடை 27 பவுண். மதிப்பு 3000 ரூபாய்க்குமேல். இந்தக்கூட்டதில் கருணாநிதி பேசும் போது பின்வருமாறு கூறினார்.

உலகில் தலைக்கு வந்த கிரீடத்தை இழந்தவர்கள் பலர். இங்கிலாந்து நாட்டின் 8-வது எட்வேட் மன்னனாக இருக்கவேண்டியவன் தனக்கு வந்த கிரீடத்தை உடனடியாக துறந்தான். சிம்சன் என்ற சீமாட்டியை மணக்க சட்டம் அனுமதிக்காததே இதற்கு காரணம்.

அவனுக்கு காதலா மகுடமா என்ற பிரச்னை எழுந்தது இறுதியில் காதலுக்காக மகுடத்தை இழந்தான்.

அதைப்போல, கட்சிக்காக இந்த மகுடத்தைநான் இப்போதே இழக்கிறேன். மூவாயிரம் ரூபாய் மதிப்புள்ள இந்த கிரீடத்தை கழகபொதுத்தேர்தல் நிதிக்காக பொருளாளர் எம். ஜி. ராமச்சந்திரனிடம் கொடுத்துவிடுவேன்.

---

## திருவிழாக்காலங்களில் ஐஸ்கிறீம் விற்பனை

யாழ்ப்பாணம், வியா.

நல்லூர் கந்தசுவாமி கோவில் திருவிழாக் காலத்தில் கோவிலின் நான்கு வீதிகளிலுமுள்ள கடைகளில் வைத்து ஐஸ்கிறீம் விற்பனவு செய்வதைத் தடைசெய்ய வேண்டுமென யாழ். மாநகரசபை சுகாதாரப் பகுதியினர் தீர்மானித்துள்ளனர்.

இதனை மீறுவோருக்கெதிராக மாநகரசபையின் உபவிதிகளின் கீழும். உணவு மருந்துக் கட்டளைச் சட்டத்தின் கீழும் கடுமையான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனத் தெரிவிககப்பட்டுள்ளது.

கோவில் சுற்றுடலிலுள்ள புனிதத் தன்மைக்கு எவ்விதத்திலும் பங்கம் விளைவிக்காதிருக்கவே இவ்வித நடவடிக்கைமேற்கொள்ளப்பட்டதாக சுகாதார வைத்திய அதிகாரி தெரிவித்துள்ளார்.

......

## நியமனம்

புத்தூர், புதன்

கோப்பாய் ஆஸ்பத்திரிக்கு இம்மாதம் 1-ம் திகதியிலிருந்து காரியாலய தாதிகளாக செல்விகள் மி. கணபதிப்பிள்ளை, அ. இராமுப்பிள்ளை ஆகிய இருவரும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

---

# இரு க. சேவையாளர் உட்பட மூவர் வேலை நீக்கம்

## சிங்களப்பரீட்சைக்குத் தோற்றவில்லையாம்

முல்லைத்தீவு, புதன்

சேவையில் சேர்ந்த காலம் முதல் இதுவரை சிங்களப் பரீட்சைகளுக்குத் தோற்றாத காரணத்தினால் வவுனியா மாவட்டத்தில் முல்லைத்தீவுப் பிரிவுக் காரியாதிகாரி பிரிவில் உள்ள இரு கிராமசேவையாளர்களும் ஒரு பிஸ்கால் சேவையாளரும் மொழிச்சட்டத்தின் கீழ் தங்கள் பதவிகளை இழந்துள்ளனர். தண்ணீரூற்றுக் கிராம சேவையாளர் திரு. இ. சிவப்பிரகாசம் புதுக்குடியிருப்புக்கிராம சேவையாளர் திரு. கா. தம்பாபிள்ளை முல்லைத்தீவு பிஸ்கால் கந்தோரைச் சேர்ந்த திரு. இ. நல்லையா ஆகிய மூவருமே பதவியிழந்தவர்களாவர்.

1968-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 31-ம் திகதியுடன் பதவியிழக்கவிருந்த இவர்கள் பொதுசேவை ஆணையாளர் குழுவுக்கு அப்பீல் செய்தனர். அவர்களின் அப்பீலை ஏற்ற பொதுச்சேவை ஆணைக்குழு ஒன்றரைவருடத்தில் சிங்களத்தில்தேர்ச்சியடைய வேண்டும் என்றும் முதல் ஆறுமாதத்தில் 3-ம் வகுப் புச்சித்தியடைய வேண்டும் எனவும் உத்தரவிட்டிருந்தது. இவர்கள் நிலைபற்றி வவுனியா எம்.பி. திரு. தா. சிவசிதம்பரம் பிரதமமந்திரியைச் சந்தித்துபேசவிருப்பதாகத் தெரிகிறது.

---

# "ஸ்ரீமாவோ ஆட்சியில் இனத்துவேஷத்துக்கு இடமில்லை"

திருகோணமலை, புதன்

"ஐக்கிய இலங்கை ஒன்றை உருவாக்க எல்லா இன மக்களும் ஒன்றுசேர வேண்டும்"

இவ்வாறு முள்ளிப்பொத்தானைக் கிராமத்தில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் கலந்துரையாற்றிய மூதூர் இரட்டைத் தொகுதியின் இரண்டாவது அங்கத்தவர் ஏ. எல். ஏ. மஜீத் கூறினார். இக்கூட்டத்திற்கு முள்ளிப்பொத்தானைக் கிராமசபைத் தலைவர் திரு. வை. ஏ. ஜபார் தலைமைவகித்தார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் குறிப்பிட்டதாவது:-

"சிங்கள மொழி இந்நாட்டின் அரசகரும மொழியாக ஏற்றுக் கொள்ளப்பட்டது உண்மையே இந்த உண்மையை 66 ஆண்டில் இந்நாட்டின் சகல பொதுமக்களும் ஏற்றுக்கொண்டிருந்தனர் என்ற உண்மையையும் நாம் மறுக்கவோ மறைக்கவோ முடியாது. 1957ம் ஆண்டில் தமிழ் மொழி விசேட பாவனைச் சட்டம் அமுலாக்கப்பட்டதைத் தொடர்ந்தே சிறுபான்மையினரும் கூட இதை ஆதரித்து இருந்தனர்., ஆனால் தமிழரசுக்கட்சியினரோ இன்றுகூட அதை எதிர்த்து வாதாடுகின்றனர். இந்நாட்டின் தன்னிறைவை காண்பதற்கு ஒரே வழி திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா அவர்களின் தலைமையின்கீழ் சமூக சீரமைப்புத் திட்டத்தில் செயலாற்றுவதேயாகும். அவரது அரசாங்கத்தில் ஒருபோதும் இனத்துவேசத்திற்கு வித்திட முடியாது."

## 'இரு ஒளிகள்'

உடுவில், புதன்

"வள்ளுவனும் பாரதியும் தமிழின் இரண்டு ஒளிகள் பண்டைய தமிழன்பெருமைகளை ஒருமுகப்படுத்தி குறள் வடிவில் வள்ளுவரும், நவீன விஞ்ஞான உலகில் தமிழ் சரிநிகர் சமானமாக வாழ வேண்டிய அவசியத்தை பாரதியும் நமக்கு எடுத்து கூறியுள்ளனர். தமிழன்னையின் இருகண்கள் பாரதியும் வள்ளுவருமாகும்."

வரணி கலை மன்றத்தினரின் நான்காவது ஆண்டு கலைவிழா நிகழ்ச்சியில்பேசிய மல்லாகம் கிராமசபைத் தலைவர் திரு. வ. பொன்னம்பலம் மேற்கண்டவாறு கூறினார்.

மாவட்ட நீதிபதி திரு. தர்மலிங்கம் விழாவுக்கு தலைமைவகித்தார். அவர் தமது தலைமையுரையில், "இசைகேட்டு மயங்காதவர்களேயில்லை. அவ்வளவு பெருமை மிக்ககலைக்கு விழா எடுப்பதும் அதனை வளர்க்க முயலுவதும் பாராட்டப்படவேண்டியதாகும் என்றார்.

---

## அங்குரார்ப்பணம்

மல்லாகம், புதன்

யாழ்ப்பாணத்தில் இலங்கை-கிழக்கு ஜேர்மனி நட்புறவுச் சங்கம் இம்மாதம் 27-ந் திகதி அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்படும். இதில் கிழக்கு ஜேர்மனி ஸ்தானிகர் திரு. கே. பொம்பெல் கலந்து கொள்வார்.

---

## ... கிடைத்தது

வவுனியா, புதன்

கடும் வரட்சியால் பாதிக்கப்பட்டுத் தண்ணீரின்றிக் கஷ்டப்படும் பாவற்குளம், புதுக்குடியிருப்பு ஆகிய பகுதிகளுக்கு வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் திரு பி. ஸி. பெரேரா நேரில் சென்று பார்வையிட்டு அங்கு குடிதண்ணீர் விநியோகிக்க ஏற்பாடு செய்துள்ளார். வவுனியாப் பகுதியில் சகல கிணறுகளும் வற்றி வரண்டு விட்டன. சுமார் பதினாயிரம் குடும்பங்கள் வரட்சியினால் பாதிக்கப்பட்டுள்ளன.

இதுவரை தண்ணீர்த் தட்டுப்பாடு காரணமாக மூன்று போகமும் வேளாண்மை செய்ய முடியாமலிருக்கும் 1400 குடும்பங்களுக்குத் தலா 20 ரூபா வீதம் நிவாரணம் வழங்கவும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. நான்கு மாதங்களுக்குள் இந் நிவாரணம் கிடைக்கும்.

---

## புனிதநகர் பிரச்னை

திருகோணமலை, புதன்

சரித்திரப் புகழ்பெற்ற திருக்கோணமலை ஆலயப் பரிபாலன சபையின் நிர்வாக சபைக் கூட்டம் டாக்டர் கே. எஸ். சித்திரவேலு தலைமையில் கீழ் ஆலயமண்டபத்தில் நடைபெற்றது. புனித நகராக்கும் விடயமாக என்னென்ன நடவடிக்கைகள் எடுக்கவேண்டும் என்றும் இதனையிட்டு பிரதமருடன் தொடர்பு கொள்வதுபற்றியும் ஆராயப்பட்டதுடன் அடுத்த நிர்வாக சபைக் கூட்டம் செப்டம்பர்மாதம் 10-ம் திகதி கூட்டுவதாயும் தீர்மானிக்கப்பட்டது.

---

## வீட்டினுள் புகுந்து பொல்லால் அடித்தார்

வல்வெட்டித்துறை, புதன்

தும்பளையைச் சேர்ந்த கா. இளையதம்பி என்பவர் அதே இடத்தைச் சேர்ந்த சேகரம் சின்னம்மா என்பவர் வீட்டுக்குள் புகுந்து பொல்லால் அடித்துப் படுகாயப் படுத்தியதாகப் பொலிசாரால்குற்றம்சாட்டித் தொடரப்பட்ட வழக்கு பருத்தித்துறை மாஜிஸ்திரேட் திரு. கே. விக்னராசா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

விசாரணையின்போது எதிரி குற்றத்தை ஒப்புக்கொள்ளவே மாஜிஸ்திரேட்தீர்ப்புக் கூறுவதை இம்மாதம் 19-ம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிவாக்கு

பாவங்கள் மறைமுகமாகவே செய்யப்படுகின்றன. நமது சிந்தனைகளைக்கூட இறைவன் அறிந்திருக்கின்ருன் என்பதை நாம் உணர்ந்த மாத்திரத்தில் விடுதலை பெறுவோம்.

— மகாத்மா காந்தி


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: "EELANADU" Jaffna.
Post Box: 49, Jaffna. Telephone: 389.

யாழ்ப்பாணம், சௌமிய வருஷம் ஆடி மாதம் 30-ந் திகதி (14 - 8 - 69)


## அரசியல் நிர்ணயசபை உடன் வேண்டும்

அடுத்த பொதுத் தேர்தல் நெருங்கிக்கொண்டிருக்கிறது. தேர்தலில் எப்படி வெற்றியீட்டுவது என்பது தான் அரசியல்வாதிகளின் இப்போதைய சிந்தனை. ஆதிக்கப்போட்டியில் வெற்றி பெற்று ஆட்சிபீடத்தில் அமர்வதற்கு என்னென்ன பிரசாரங்களை மேற்கொள்ளலாமென்பது பற்றி அரசியல் கட்சிகள் திட்டம் தீட்டத் தொடங்கிவிட்டன. மகாநாடுகள், கூட்டங்கள், விழாக்கள் ஆரம்பமாகிவிட்டன. ஆட்சிமன்றத்தில் நடைபெறும் விவாதங்களைக்கூட அடுத்த தேர்தலை நோக்கமாகக் கொண்டு பிரசாரத்துக்குப் பயன்படுத்த கட்சிகளும் பிரதிநிதிகளும் தயாராகிவிட்டனர். இதற்காக அரசியல்வாதிகளையோ, அரசியல் கட்சிகளையோ குறை கூறமுடியாது. இன்றைய அரசியலமைப்பில் அவர்கள் இதைத்தான் செய்வார்கள்; அரசியல்கட்சிகளும் இப்படித் தான் நடந்துகொள்ள வேண்டும். இந்த நிலை மாருதா; மாறவழியில்லையா?

'எய்தவன்இருக்க அம்பை நோவதில் பயனில்லை' இந்த நாட்டின் இன்றைய நிலைக்கு முழுக்க முழுக்க இன்றைய அரசியல் அமைப்பும் அதை உருவாக்கியவர்களும் தான் பொறுப்பு. இதை பலரும் உணர்ந்துள்ளனர். இன்றைய அரசியல் அமைப்பைக் கைவிட்டு புதிய அரசியல் அமைப்பை உருவாக்கவேண்டும், அல்லது இந்த அரசியல் அமைப்பை திருத்தியாவது அமைக்க வேண்டுமென்பதில் கருத்தொற்றுமை இருக்கிறது அரசியல் அமைப்பைத் திருத்தி அமைப்பது பற்றி ஆராய்ந்து ஆலோசனை கூறுவதற்கு 1956 ம் ஆண்டு தொடக்கம் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளன. ஆட்சிமன்றத்தின் இரு சபைகளையும் சேர்ந்த பிரதிநிதிகளைக் கொண்ட தெரிவுக் குழுக்கள் நியமிக்கப்பட்டு வந்திருக்கின்றன. மென்றும் கூறுகின்றன. தங்களை ஆட்சிபீடத்துக்குத் தெரிவுசெய்து அனுப்பினுல் "வானத்தை வில்லாகவளைப் போம்; மண்ணைக் கயிருகத் திரிப்போம்" என்று அரசியல்வாதிகளும் அரசியல் கட்சிகளும் முழக்கம்செய்து வாக்குகளைப் பெறுவதும் பின்னர் வாக்குறுதிகளைக் காற்றில் பறக்கவிடுவதும் இன்றைய அரசியலமைப்பின் விளைவுதான்.

இந்த நாட்டு மக்கள் சுதந்திரமாகவும் சுபீட்சமாகவும் வாழவேண்டுமென்பதில் எல்லாக் கட்சிகளுக்கும் தலைவர்களுக்கும் அக்கறையில்லாமலில்லை. ஆட்சி அதிகாரப்போட்டி, இனவாதம்; மொழிவாதம்; மதவாதம்; பிரதேசவாதம் என்ற பிரிவினைகளுக்கும் பாரபட்ச நடவடிக்கைகளுக்கும் வழி வகுக்கிறது.

சுதந்திரம், சுபீட்சம் என்ற கோட்டையை உறுதியாக அமைப்பதானல் அஸ்திவாரம் பலமாக இருக்க வேண்டும். அரசியல் அமைப்பு என்ற அஸ்திவாரம் பலமற்றதாக இருப்பதுதான் நாட்டின் இன்றைய அவல நிலைக்குப் பெரிதும் காரணமாகும். தேர்தல் வரும் போகும்; அமைச்சர்கள் வருவார்கள் போவார்கள். ஆனல் நாடுஎன்றும் இருக்க வேண்டும்.

இத்தனை பிரச்னைகளுக்கும் நல்லதொரு தீர்வு கண்டு நாட்டின் சுதந்திரத்தைப் பாதுகாக்கவும் மக்கள் சுபீட்சமாக வாழவும் வழியென்ன?

ஐந்து வருடங்களுக்கொரு முறையோ, அதற்கிடையிலேயோ இன்றைய அரசியல் அமைப்பு முறையின் கீழ் நடைபெறும் பொதுத்தேர்தலைச் சிறிது நிறுத்தி வைத்து — நமது நாட்டின் சுதந்திரத்தைப் பாதுகாத்து சுபீட்சத்தை ஏற்படுத்தவும்; மக்கள் பசியும் பட்டினியும்

# எல்லோருக்கும் நண்பன் சுதந்திர பாகிஸ்தான்

இன்று பாகிஸ்தான் தனது சுதந்திரத் தினத்தைக் கொண்டாடுகிறது. 1947-ம் ஆண்டு ஆகஸ்ட் 14-ம் திகதி பாகிஸ்தான் இந்திய உப கண்டத்திலிருந்து பிரிந்து தனிராஜ்யமாக சுதந்திரம் பெற்றது. பாகிஸ்தானை உருவாக்கிய சிற்பி ஜனப் முகம்மதலி ஜின்ன இன்று இல்லை. அவருக்கு உறுதுணையாக விருந்த லியாகத் அலியும் இன்று இல்லை. தலைவர் ஜின்னவும் லியாகத் அலியும் மறைந்த பின்னர் பாகிஸ்தானில் ஜனநாயகமும் இல்லாமல் போய் விட்டது. ஆனலும் ஜெனரல் யாஹ்யாகான் தமது மந்திரிசபையில் ஏழு சிவிலின்களைச் சேர்த்திருப்பதுடன் விரைவில் பொதுத் தேர்தல் நடைபெறுமென்றும் அறிவித்திருக்கிருர். எனவே பாகிஸ்தான் மீண்டும் விரைவில் ஒரு ஜனநாயகக் குடியரசாக விளங்கும் என்று எதிர்பார்க்கலாம்.

ஜனநாயக ஆட்சி அமைப்பைப்பின்பற்றி வந்தபோதிலும் அதன்பின் பீல்ட் மார்ஷல் அயூப்கானின் ஆட்சியில் அடிப்படை ஜனநாயக அமைப்பு உருவான போதிலும் பாகிஸ்தானின் முன்னேற்றம் தடைப்படவில்லையென்பதை எவரும் ஒப்புக் கொள்வர்.

விவசாயம் கைத்தொழில்களில் மட்டுமல்லாது வெளிநாடுகளுடன் அதாவது வெளிவல்லரசுகளுடன் பாகிஸ்தான பின்பற்றி வரும் கொள்கை அதன் வெற்றிக்கு ஓர் அறிகுறி.

ஒரே உப கண்டமாக விளங்கிய இந்திய உப கண்டத்திலிருந்து பாகிஸ்தான் தனியாகப் பிரிந்தது. ஆனலும் அது 'சென்டோ', 'சியாட்டோ' என்ற இராணுவக் கூட்டமைப்புக்களில் சேர்ந்து தன்னைப் பாதுகாத்துக் கொள்ள முனைந்தது. இதே சமயம் இந்திய அரசு எந்த இராணுவக் கூட்டுக்களிலும் சேராமல் நடுநிலைமைக் கொள்கையைப் பின்பற்றி வந்தது.

ஆனல் காலப்போக்கில் பீல்ட் மார்ஷல் அயூப்கான் உட்பட பாகிஸ்தான் தலைவர்கள் பின்பற்றிய ராஜதந்திரம் இன்று அமெரிக்கா முதல் சீனவரை உலகில் இருதுருவமாக விளங்கும், இருவேறுபட்ட வாழ்க்கை முறையைப் பின்பற்றும் வல்லரசுகளுடன் உறவு கொண்டு நண்பனக விளங்கக்கூடிய நிலையைக் கொண்டு வந்திருக்கிறது.

ஒரு சமயத்தில் சோவியத் ரஷ்யாவுக்கும் கம்யூனிஸ்ட் சீனவுக்கும் பயந்து உலகில் கம்யூனிஸம் பரவாமல் தடுப்பதற்கு பாகிஸ்தானுக்குப் பொருளாதார உதவியும் ஆயுத உதவியும் அளித்து வந்த அமெரிக்காவே இன்று பாகிஸ்தரனின் உதவியுடன்

### எஸ். எம் ஜி.

வட வியட்னமியருடன் பேச்சுவார்த்தை நடத்திய வியட்னம் பிரச்னையிலிருந்து கௌரவமாக விலகிக்கொள்ள முயற்சி செய்வதாக அமெரிக்க அதிபர் நிக்ஸன் பாகிஸ்தானுக்கு விஜயம் செய்த பின் வெளியான செய்திகளிலிருந்து தெரிகிறது. இதே சமயம் ஒரு காலத்துல் பாகிஸ்தானை மேற்கத்திய வல்லரசுகளின் இராணுவக் கூட்டுக்களில் சேர்ந்துள்ள எதேச்சாதிகார முதலாளித்துவ தாசர் என்று வர்ணித்த சோவியத் யூனியனே இன்று பாகிஸ்தான் ஒரு நடுநிலைமைநாடு என்று சொல்லுமளவுக்கு பாகிஸ்தான் தனது வெளிவிவகார கொள்கையில் ராஜதந்திர வெற்றிகளை ஈட்டியுள்ளதென்பதற்குச் சான்று.

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்குமிடையில் என்னதான் பிரச்னையிருந்தாலும் என்னதான் கொள்கைவேறுபாடு இருந்தாலும் பாகிஸ்தானின் ராஜதந்திரம் உலக வல்லரசுகளாக விளங்கும் அமெரிக்காவையும் ரஷ்யாவையும் அதே வரிசையில் வரும் சீனவையும் கவர்ந்து விட்டது என்றுதான் சொல்லவேண்டும்,

அமெரிக்காவிடமிருந்து உதவிபெற்ற பாகிஸ்தான் பின்னர் அமெரிக்காவின் பரம எதிரியாகக் கருதப்பட்ட சீனவுடனும் சோவியத் யூனியனுடனும் நல்லுறவும் நட்புறவும் கொண்டு பொருளாதார இராணுவ ஒத்துழைப்புப் பெற்றுவருவதொன்றே பாகிஸ்தானின் வெளிவிவகாரக் கொள்கையின் வெற்றிக்கு எடுத்துக் காட்டு,

## ஆட்சிமன்றத்திலே

நமது சபை நிருபர் பெரி. சுந்தரலிங்கம்

# தமிழ்க்கட்சிகளின் பிரசாரம் சபையில் ஆரம்பமா?

# ஜி. ஜி. - தர்மலிங்கம் பேச்சும் குறுக்கீடும்

வரவு செலவுத் திட்ட விவாதத்தில்முதல் நாளன்று (10-ம் திகதியன்று) எதிர்க் கட்சிகளின் சார்பில் திரு. ரி, பி. இலங்கரத்தின. ஏராளமான புள்ளிவிபரங்களுடனும், மத்திய வங்கி அறிக்கைகளின் ஆதாரங்களுடனும் நாட்டில் தேசிய அரசாங்கம் ஆட்சிக்கு வந்ததிலிருந்து எந்த விதமான பொருளாதார அபிவிருத்தியும் ஏற்படவில்லை என்று காட்ட முற்பட்டார்.

"பொய், படுபொய் புள்ளி விபரங்கள்" என்றுவரிசைப் படுத்தி, புள்ளிவிபரங்காட்டும் புலிகளைக கேலி செய்வது வழக்கம்.



தேசிய அரசாங்கத்தின் ஒரே அங்கமாக தமிழரசுக் கட்சியும், தமிழ் காங்கிரசும் இருந்தபோதே எந்த ஒரு பிரச்னைகளிலும், இரு கட்சிகளும் ஒரே நிலையில் நின்று ஒரே நோக்கில் அணுகியது இடையாது! சந்தர்ப்பம் இடைக்கும் போதெல்லாம் சாடைமாடையாகச் சாடிக் கொள்ளத் தவறமாட்டார்கள்!

அப்படிப்பட்டவர்கள் எதிரும் புதிருமாக உட்கார்ந்து விட்டால் கேட்கவாவேண்டும் எந்த நேரமும் எள்ளும் கொள்ளும் தான் வெடிக்கின்றது.

சிம்மாசனப் பிரசங்க விவாதத்தில் விட்ட குறை, தொட்டகுறை இருந்தால், அதை வரவு செலவுத் திட்ட விவாதத்தில் முடித்துவிட தமிழரசுக்கட்சியும், தமிழ்க்காங்கிரசும் தீர்மானித்திருக்கின்றன என்பதில் ரகசியமொன்றுமில்லை. தேர்தல் நெருங்கிவரும் வேளையில் "அறையில் ஆடித்தானே அம்பலத்தில் ஆடவேண்டும்" எனவேதான் தமிழ்க் [illegible] பிரசாரத்தை வட்டுக்கோட்டை எம். பி. [illegible] பிரசங்க விவாதத்தில் தொடர்ந்து வைத்தால் என்ருல் வரவு செலவுத் திட்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐயாறன் எழுதுவது

"ஒரே உலகம். ஒரே குடும்பம்" சிங்கள-தமிழ் சகோதரத்வம்" என்று தலைப்பிட்டு கொழும்பிலிருந்து ஒரு துண்டுப் பிரசுரம் தபாலில் கிடைத்தது.

"நமது நாட்டிலே இரு பெரிய சமூகங்களாகவுள்ள சிங்களவர்களுக்கும் தமிழர்களுக்குமிடையே பரஸ்பர நல்லுறவு, ஐக்கியம், ஒத்துழைப்பு முதலியவற்றை வளர்ப்பது" என்பது இந்த ஸ்தாபனத்தின் முதல நோக்கம்.

2. வகுப்புவாதம் குறுகிய ஆதாரமற்ற விஷயமென்பதை சிங்கள, தமிழ் பொது மக்களுக்கு விளங்கும்படி நிருபிப்பது.

3. சிங்களவருக்கும் தமிழருக்குமிடையே கலப்பு மணத்தை ஆதரித்துவளர்ப்பது.

4. இவ்வித வழிகளிலே பலமான ஒன்றுபட்ட, பிரிவினையில்லாத, பலமான, அமைதியான ஒரே இலங்கைதேசிய சமுதாயத்தைக் கட்டி வளர்ப்பது.

மேற்குறித்த நோக்கங்களை ஆதரிப்பவர்கள், 17 பி பி (Fife) ரோடு, திம்பிரிகாஸியா, கொழும்பு-5. என்ற விலாசத்துக்கு எழுதுமாறு பண்டுலா ஸ்ரீ குணவர்த்தன என்பவர் அந்தத் துண்டுப் பிரசுரத்தில் கேட்டிருக்கிருர்.

0 0 0

நோக்கம் வெகுவாக நல்லதுதான். ஆனல் இந்த பிரசுரம் சிங்களத்திலும், ஆங்கிலத்திலும் மட்டும் வெளியிட்டிருப்பதைக் கண்டதுமே மிக ஏமாற்றமாக இருந்தது.

சிங்களவருக்கும் தமிழருக்கும் ஒற்றுமை ஏற்படுத்த விரும்பும் அவர் சிங்களத்தைப் போல் தமிழிலும் ஏன் இதை வெளியிடவில்லை? தமிழருக்கெல்லாம் ஆங்கிலம் தெரியுமென்று அவர் கருதுகிருரா? அல்லது இங்கு தமிழரின் மொழி ஆங்கிலமென்று எண்ணமா?

தமிழரில் முக்கியமானவர்களுக்கு ஆங்கிலம் தெரிவதாகவே வைத்துக் கொண்டாலும், தங்கள் உயிர்போன்ற தமிழ் மொழியைப் புறக்கணிப்பது, தங்களை அவமதித்து அலட்சியப்படுத்துவதாகுமென்றே தமிழர் கருதுவார்கள். தமிழரில் யாரும் இதே மேலான நோக்கத்துடன், தமிழிலும், ஆங்கிலத்திலும் ஒரு துண்டுப் பிரசுரத்தை அச்சடித்து சிங்களத்தை ஒதுக்கி இருப்

இலங்கையிலே இரு முக்கிய சமூகத்தவரும் ஒற்றுமையாகத்தான் வாழ்ந்து வந்தார்கள். சிங்களம் மட்டும் என்ற சட்டத்தை நிறைவேற்றி, அரசாங்க மொழிகளில் ஒன்ருக இருந்துவந்த தமிழை ஒதுக்கி விட்டதுதான் வேற்றுமைக்கும் சங்கடத்துக்கும் அடிப்படைக் காரணமாகும்.

மீண்டும் இந்நாட்டில் இரு சமூகங்களிடையே ஒற்றுமை ஏற்பட வேண்டுமென்று உண்மையில் கருதுபவர்கள், தமிழுக்கு அரசாங்க மொழி அந்தஸ்தை மீண்டும் அளிக்க முன்வர வேண்டாமா? இதைவிட்டு, கலப்புமணம் என்று ஏதேதோ பேசுவதில் என்ன பயன்?

ஒற்றுமை வேண்டுமென்று கேட்கும் துண்டுப்பிரசுரத்திலேயே தமிழ் மொழியைப் புறக்கணித்துவிட்டது சரியா? தன்மானமுள்ள தமிழரின் உணர்ச்சியை அறிந்திருப்பின் இந்தத் தவறை செய்திருக்க மாட்டார்கள். 1955ம் வருடத்துக்கு முன் இருந்தது போல், இரு மொழிகளும் இலங்கையின் அரசாங்க மொழிகளாக இருக்கும்படி மீண்டும் ஏன் செய்ய முடியாது? ஸ்ரீ குணவர்த்தன இதற்கு பதில் அளிப்பரா?

0 0 0

யாழ்ப்பாணத்திலிருந்து ஒரு மாணவர் எழுதியுள்ள கடிதத்தில் இப்பத்தியின் கடைசியிலே போடும் தேவார, திருவாசகம் தமக்கு மிகவும் பிடிப்பதாயும், சினிமா பாடல்களில் விருப்பமில்லை என்றும் இலங்கை வானெலியில் இவற்றைக் கேடக முடியவில்லை என்றும் தெரிவிக்கிருர்.

சினிமா பாட்டுகளை விரும்பாத பெரிய வகுப்பு மாணவர் இக்காலத்தில் இருப்பது வியப்பைத் தருகின்றது. சில குழந்தைகளை தேவாரம் பாடும்படி கேட்டேன். அவர்கள் சேர்ந்து மழலைச் சொல்லிலே, மூன்று வயதுக் குழந்தை பாடிய 'தோடுடைய செவியன்..." தேவாரத்தைப் பாடினர் எவ்வளவு இன்பமாக இருந்தது?

0 0 0

சலம் பூவொடு தூபம் மறந்தறியேன் தமிழோடிசை பாடல் மறந்தறியேன், நலந்தீங்கிலும் உன்னை மறந்தறியேன் உன் நாமம் என்நாவில் மறந்தறியேன், உலந்தார் தலையிற்பலி கொண்டுழல் வாய் உடலுள்ளுறு சூலை தவிர்த்

பற்றி ஆராய்ந்து ஆலோசனை கூறுவதற்கு 1956 ம் ஆண்டு தொடக்கம் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளன. ஆட்சிமன்றத்தின் இரு சபைகளையும் சேர்ந்த பிரதிநிதிகளைக் கொண்ட தெரிவுக் குழுக்கள் நியமிக்கப்பட்டு வந்திருக்கின்றன. கலைக்கப்பட நேர்ந்ததாலும்ஆட்சிமன்றம்கலைக்கப்பட வேண்டிஏற்பட்டதாலும் இத்தெரிவுக் குழுக்கள் தங்கள் கடமையைச் செய்ய முடியாது போய்விட்டன. அரசியல் அமைப்பில் திருத்தம் செய்தால் மட்டும் போதாது. புதிய அரசியல் அமைப்பு ஒன்றை உருவாக்கவேண்டுமென்று எதிர்க்கட்சியினர் கூறிவந்ததுடன் 'தேசிய அரசாங்கம் அமைத்த தெரிவுக் குழுவில் சேர்ந்து ஒத்துழைக்கவும் மறுத்துவிட்டனர்.

இன்றைய அரசியலமைப்பு நமது நாட்டுக்குப் பொருத்தமற்றது என்பதிலும் நாட்டின் பிரச்னைகள் மேலும் அதிகரித்து வருவதற்கும் தேசிய ஐக்கியம் சீர்குலைந்து போவதற்கும் பொருளாதார நிலை சீரடையாதிருப்பதற்கும் இன்றைய அரசியல் அமைப்புத்தான் அடிப்படைக் காரணம் என்பதை இந் நாட்டின் தலைவர்களும் மக்களும் நன்றாக உணர்ந்துள்ளனர்.

இன்றைய அரசியலமைப்பு இருக்கும் வரை பொதுத் தேர்தலில் பொதுமக்களின் வாக்குகளைப் பெற்று ஆட்சிபீடத்துக்கு வருவதற்கு என்னென்னபிரச்னைகளைக்கிளப்பலாம் என்பது பற்றியும், தேர்தல்முடிந்ததும் எந்தெந்தக் கட்சிகளுக்கு என்னென்ன வாக்குறுதி அளித்து, ஒப்பந்தம் செய்து ஆட்சிபீடத்தில் அமரலாம் என்பதுபற்றியும் யார் யாரை மந்திரிகளாக்கி அவர்களின் ஆதரவுடன் ஆட்சியை நடத்தலாமென்பதுபற்றியும்தான் சிந்தனையிலிருக்கும் இதே சமயம் ஆட்சிக்கு வரத் தவறியவர்கள் எதிர்க்கட்சியிலிருந்தபடி, ஆட்சிபீடம் ஏறியவர்களை எப்படி அதில் இருந்து இறக்கலாம் என்பது பற்றியும் ஆட்சியாளர் கொண்டுவரும் திட்டங்களை எப்படி முறியடிக்கலாம் என்பது பற்றியுமே சிந்திக்க முடியும்.

எல்லாக் கட்சிகளுமே தங்கள் கொள்கை சோஷலிஸம்தான்என்றும் மக்கள் சுதந்திரமாகவும் சுபீட்சமாகவும் வாழவேண்டுமென்பதே தங்கள் நோக்கயிலேயோ இன்றைய அரசியல் அமைப்பு முறையின் கீழ் நடைபெறும் பொதுத்தேர்தலைச் சிறிது நிறுத்தி வைத்து — நமது நாட்டின் சுதந்திரத்தைப் பாதுகாத்து சுபீட்சத்தை ஏற்படுத்தவும்; மக்கள் பசியும் பட்டினியும் இன்றி வாழ்வும் வளமும் பெறக்கூடிய தேசிய ஒருமைபாட்டை நிலைநாட்டி இந் நாட்டுமக்கள் அனைவரும் சம உரிமையுடனும் சம சந்தர்ப்பத்துடனும் வாழ வழிசெய்யக்கூடிய புதிய அரசியல் அமைப்ப ஒன்றை உருவாக்குவதற்கு-உடனடியாக தேசிய அரசியல் நிர்ணயசபையொன்றைக் கூட்டவேண்டும்,

அடுத்த தேர்தலில் உள்ள அக்கறையை விடுத்து அடுத்த சந்ததியில் அக்கறை இருந்தால் இந்த முயற்சியை மேற்கொள்ள நமதுநாட்டுத்தலைவர்கள் தயங்கவேண்டியதில்லை: செய்வார்களா?

## 2-ம் எதிரி......

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

எதிரி கால்பக்கமும் வெட்டினார்கள். 1ம் எதிரி வலது கையையும், இடது பெருவிரலிலும் வெட்டினர். வெட்ட வேண்டாம் மென்று இறந்தவர் மேலே கையை தூக்கிய போது வெட்டு விழுந்தது 3ம் எதிரி வயிற்றில் வெட்டினார், 2ம் எதிரி தடியைப் போட்டுவிட்டுப் போய்விட்டார். எதிரிகள் பஸ்ஸில் ஏறப் போனார்கள். கண்டாக்டர் ஏறாதே ஏறாதே என்று சொன்னார். நடராசா ஓடிப் போவதை கண்டேன்.

இறந்தவர் தண்ணீர் தரும்படி கேட்டார். நான் தண்ணீர் கொடுத்தேன், வேறு ஒருவரும் இல்லாததால் நான்டாக்டரை கூட்டிவரக் போனேன். அப்போதிக்கரி வீட்டை நோக்கி ஓடினேன். வழியில் போஸ்மன் சூசைப்பிள்ளை வந்தார், அவர்கள் பஸ்ஸில் வந்த அந்த மனிதனை வெட்டிவிட்டு போறாங்கள் அப்போதிக்கரியை கூட்டிவா என்று போஸ்மனிடம் சொன்னேன்.

அவர்கள் வெட்டிப் போட்டு போறார்கள் வந்து பாருங்கள் என்று குளறினேன், நான் திரும்ப ஓடி வந்து இறந்தவர் பக்கத்தில் நின்றேன், அப்போதிக்கரி வந்தார், இறந்தவரைப் பார்த்தார். பலர் அவ்விடத்தில் கூடிவிட்டனர். இறந்தவருடன் அப்போதிக்கரி கதைக்க எத்தனித்தார். அங்கு நின்றவர்களின் உதவியுடன் அப்போதிக்கரி, இறந்தவரை தூக்கி விறாந்தையில் கிடத்தினார். அப்போதிக்கரி இறந்தவருடன் கதைத்துவிட்டு, என்னிடம் கடதாசி தரும்படி கேட்டார். 2 பேப்பர் கொடுத்தேன். இறந்தவரிடம் கேட்டுக் கேட்டுஎழுதினார். நான் கந்தோருக்கு போய்விட்டேன் அப்போது நடராசா 2ம் எதிரியிடம்பறித்ததாகக் கூறி ஒரு கத்தியைக் கொண்டுவந்து தந்தார் பக்கத்தில் வைக்கும்படி கூறினேன். பொலிஸார் வந்தபோது அவர்களிடம் கொடுத்தேன்.

விசாரணை தொடர்ந்து நடைபெறுகிறது.

லிருந்து எந்த விதமான பொருளாதார அபிவிருத்தியும் ஏற்படவில்லை என்று காட்ட முற்பட்டார்.

''பொய், படுபொய் புள்ளி விபரங்கள்' என்றுவரிசைப்படுத்தி, புள்ளிவிபரங்காட்டும் புலிகளைக கேலி செய்வது வழக்கம்.

எல்லார்க்கும், எல்லாமாய் எல்லவர்க்கும் கைகொடுத்து உதவும் சக்தி சாட்சாத் புள்ளி விபரங்களுக்குததான் உண்டு.

மத்தியவங்கி அறிக்கைகளைப் பக்கம், பக்மாகப் புரட்டி வரி, வரியாக அலசி ஆராய்ந்து புள்ளிவிபரங்களைச் சேகரித்து தேசீய அரசாங்கம் ஆட்சிக்கு வந்தபின் மொத்த தேசிய செல்வத்தில் 8.3 சதவிதம் வளர்ச்சியடைந்திருக்கிறது என்று ஆட்சியினர் காட்டினால் அதே மத்திய வங்கி அறிக்கைகளையும், புள்ளிவிபாங்களையுமே வைத்துக் கொண்டு எந்தப் பொருளாதார வளர்ச்சியுமே ஏற்படவில்லை என்று எதிர்க்கட்சியினரும் வெற்றிகாரமாகக் காட்டுகின்றார்கள்.

உண்மை பொதுக்களுக்குத்தான் வெளிச்சம்.

ரி. பி. இலங்கரத்ன, முன்னைநாள் நிதியமைச்சர் வர்த்தக வியாபார அமைச்சர் எனவே 3 மணித்தியாலம் 13 நிமிடம் அவர் புள்ளி விபரங்களோடு கட்டிப்புரண்டது பொருத்தம் தான்.

இவரைத் தொடர்ந்து நிதியமைச்சர் திரு. என். விமலசேன பேசினார் ஹிஸ் மாஸ்டர் வாய்ஸ்'' அவ்வளவுதான் நிதியமைச்சரின் வரவு செலவுத் திட்டப் பேச்சிலிருந்தும் அதற்குத் துணையாக வெளியிடப்பட்ட கையேட்டிலிருந்தும் பந்தி, பந்தியாக சங்கோஜம் எதுவுமின்றி எடுத்து சர்வசாதாரணமாக வாசித்து தனது வாக்குசாதுர்யத்தை காட்டினார் நிதியமைச்சர்.

அடுத்து அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் தலைவர் திரு. ஜி.ஜி. பொன்னம்பலம்

சிம்மாசனப் பிரசங்க விவாதத்தில் விட்ட குறை, தொட்டகுறை இருந்தால், அதை வரவு செலவுத் திட்ட விவாதத்தில் முடித்துவிட தமிழரசுக்கட்சியும், தமிழ்க்காங்கிரசும் தீர்மானித்திருக்கின்றன என்பதில் ரகசியமொன்றுமில்லை. தேர்தல் நெருங்கிவரும் வேளையில் ''அறையில் ஆடித்தானே அம்பலத்தில் ஆடவேண்டும்'' எனவேதான் தமிழ்க் கட்சிகளின் தேர்தல் பிரசாரத்தை வட்டுக்கோட்டை எம். பி. அமிர்தலிங்கம் சிம்மாசனப் பிரசங்க விவாதத்தில் தொடர்ந்து வைத்தால் என்றால் வரவு செலவுத் திட்ட விவாதத்தில் தமிழ்க் காங்கிரஸ் தலைவர் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் கதையை தொடர்ந்து வெற்றிகரமாக நடத்தினார்.



கம்பீரமாக எழுந்தார். அப்பாவின் பேச்சைக் கேட்க தப்பாது வந்திருந்தார் குமார் பொன்னம்பலம். பொதுமககள் கலரியில் வந்து நேரத்தோடே இடம் பிடித்துக் கொண்டிருந்தார்.

திரு ஜி. ஜி. எழுந்து பின்னால் தமிழரசுக் கட்சிக்காரர்களுக்கு கொடுக்கப் போகும். சூட்டுக்குக் முன்னறிவிப்பாகவோ என்னவோ பிரேம தாசாவிலிருந்துஈரிய கொல்லை ஈறாக சில குறிப்பிட்ட அமைச்சர்களுக்கு ''ஐஸ்'' வைத்துவிட்டார்.

ஜி ஜி யின் பேச்சை அடிக்கடி கேட்க முடியாது என்றாவது ஒருநாள் எழுந்தார் என்றால் ''கேட்டார் பிணிக்குந் தகைவாய்க் கேளாரும் வேட்ப'' மொழிவார் என்பது எல்லார்க்கும் தெரியும் எனவே காதுகளைக் கூர்மையாக்கிக் கொண்டு கேட்க ஆரம்பித்தார்கள்.

வாழ்க்கைச் செலவு உயர்வு; வேலைவாய்ப்பின்மை யாழ்ப்பாண ஆஸ்பத்திரி; காங்கேசன் துறைத்துறைமுகம்; தொழில் நுட்பக் கல்லூரி இப்படிஎல்லா விஷயங்களையும் விரைவாகத் தொட்டுக் காட்டிக் கொண்டே வந்த ஜி ஜி மொழிப்பிரச்னைக்கு வந்தார் 1966ம் ஆண்டு பெரும்பரபரப்புக்கிடையே நிறை

வேற்றப்பட்ட தமிழ் மொழி சட்டப் பிரமாணங்கள் பெரும் மோசடி ஏமாற்று வித்தை என்று வர்ணித்து விட்டு இந்தநாட்டில் தமிழ் மகன் எந்தப்பாகத்திலிருந்தாலும் அவனுக்கு அரசாங்கத்தோடு தமிழில் தொடர்பு கொண்டு தமிழில் பதில் பெற உரிமை இருக்க வேண்டும்; அதோடு தமிழ்க் குழந்தைகளுக்குத் தமிழ் மொழியிலிலேயே தாய் மொழியிலேயே கற்பிக்கவேண்டும் என்று முழக்கித்தள்ளினார்,

அடுத்து 55 வயதுக்கு மேலான பழைய ஊழியர்களுக்கும் சில்லறைச்சிப்பந்திகளுக்கும் சிங்கள மொழித் திறமை தேவையில்லைஇதனை நிதியமைச்சர் கவனித்து நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று சுட்டிக்காட்டி விட்டு அவரது ''பெட் சப்ஜக்ட்''டான பல்கலைக்கழக விஷத்துக்கு வந்தார்,

சிம்மாசனப் பிரசங்க விவதத்திலே, சர் பொன்னம்பலம் இராமநாதன் விட்டுச் சென்றுள்ள ஒரு சில சொத்துக்களை வைத்துக்கொண்டு, இரண்டு விரிவுரையாளர்களுக்கே சம்பளம்கொடுக்கமுடியாது'' என்று பட்டிருப்பு எம் பி இராசமரணிக்கம், பேச்சோடு பேச்சாகச் சொல்லிவைத்ததை எடுத்துக்கொண்டு உணர்ச்சிவயப்பட்டு விளாசித் தள்ளினார் ஜி.ஜி.

'2கோடி ரூபாய் பெறுமதியான சொத்துக்கள் இருக்கின்றன; உறுதிகளும் ஒப்பனைகளும் இதோ இருக்கின்றன.' யார் இதை மறுக்க முடியும்? என்று பைல் கட்டொன்றிலிருந்து சிலபிரதிகளை எடுத்து வைத்துக் கொண்டு முழங்கினார் ஜி.ஜி.

காலஞ்சென்ற மழவராயர் சர் பொன்னம்பலம் இராமநாதன் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் ஆகியோர் விட்டுச் சென்றுள்ள சொத்துக்களை விட அதிகமான தொகையை எந்த அரசாங்கமும் எந்தக் காலத்திலும் எந்தப் பல்கலைக்கழகத்திற்கும் ஒதுக்காது; ஒதுக்குவதற்கும் நிதியிருக்காது' என்று ஆவேசம் வந்தவர் போல் குமுறினார்.

தமிழர்களுக்கு பல்கலைக் கழகம் தேவை, அதுமொழி



அடிபபடையிலோ பிராந்திய அடிப்பபடையிலோ குறுகிய வட்டத்துக்குள் இயங்காது செயல்படாது. எல்லா பிரிவுகளும்உடைய முழுமை நிறைந்த நவீன பல்கலைக்கழகம்தான் தேவை; அது யாழ்ப்பாணத்தில்தான் நிறுவப்பட வேண்டும் என்பதுதான் ஜி.ஜி.யின் தலையாய வாதம், அதற்குத் துணையாக நீடாம் பல்கலைக்கழக விசாரணைக் கமிஷன் அறிக்கை குணவர்த்தன பல்கலைக்கழக விசாரணைக் கமிஷன் அறிக்கை ஆகியவற்றிலிருந்து மேற்கோள்கள் காட்டினார்.

வடக்கிலா, கிழக்கிலா பல்கலைக்கழகம் நிறுவ வேண்டும் என்பதற்கும் கிழக்கின் விடிவெள்ளி விபுலானந்த அடிகளையே துணைக்கழைத்து அவரே யாழ்ப்பாணத்தில் தான் பல்கலைக்கழகம் வேண்டுமென்று சொல்லியிருக்கிறார் என்று சொல்லியதோடு நிற்காமல் அவரே சொல்லியபிறகு 'இந்திய தி.மு.க. காரர்களை காப்பியடித்து அவர்கள் பாணியில் பேச முயற்சிப்பவர்கள் எப்படிக் குற்றம் சொல்லலாம்? என்று யார்மீதோ உள்ள கசப்பை அப்பட்டமாக வெளிப்படுத்தினார்.

இந்துப் பல்கலைக்கழகம் கேட்கலாமா? என்ற குற்றச்சாட்டுக்கு வடஇந்தியாவில் பனாரிஸ்ஸில் முதன் முதல் இந்துப் பல்கலைக்கழகம் நிறுவக்காலாக இருந்த பண்டிட் மாணவியாஎழுதியவற்றிலிருந்து மேற்கோள் காட்டி இங்கே இப்போது காணப்படும்முட்டுக்கட்டைகளைப் போன்று அங்கேஅப்போதும் இருக்கத்தான் செய்தது' என்று ஒதுக்கினார்.

மதச்சார்புடைய பல்கலைகழகம் கேட்டால் இந்து மதத்தைச் சாராதவர்கள் என்ன நினைப்பார்கள்? இப்படிக் கேட்டவர்களுக்கு அகில இலங்கைத் தமிழ்க்

கனைப்பது, தங்களை அவமதித்து அலட்சியப்படுத்துவதாகுமென்றே தமிழர் கருதுவார்கள். தமிழரில் யாரும் இதே மேலான நோக்கத்துடன், தமிழிலும், ஆங்கிலத்திலும் ஒரு துண்டுப் பிரசுரத்தை அச்சடித்து சிங்களத்தை ஒதுக்கி இருப்பின் சிங்களவருக்கு அது எப்படி இருக்கும்?

0 0 0

காங்கிரஸ் தலைவர் ஜி. ஜி. இதோ பதில் சொல்கிறார்.

'இந்துப் பல்கலைக் கழகம் மதச்சார்புடைய பல்கலைக் கழகம் என்றும் பொய்ப் பிரசாரம் செய்கிறார்கள். நான் இந்தக் கோரிக்கையை முன்வைக்குமுன் வண எமிலியானுஸ்பிள்ளை அவர்கள் உலகப்பிரசித்திபெற்றகல்விமான் வண டாக்டர் டி.ரி. நைல்ஸ் ஆகியோருடன் கலந்தாலோசித்து அவர்களின் முழு இணக்கத்துடனேயே முன்வைத்தேன். இப்படி அறிவால் உயர்ந்த செரியார்கள் எல்லாரும்ஒரு மனதுடன் இணக்கம் தெரிவித்திருக்க, 'எதையும் தேர்தல் கண்ணோட்டத்துடன் நோக்கும் சிற்றறிவாளர்கள் மதச்சார்பான கோரிக்கை என்று கோஷமெழுப்புகிறார்கள்' என்று சொல்லிய ஜி. ஜி. இவர்களை சந்திக்கவேண்டிய இடத்தில் (பொதுத் தேர்தலில்) சந்தித்துக் கொடுக்கவேண்டிய பதிலைக் கொடுக்கவும் நான் தயாராக இருக்கிறேன்' என்று முழங்கினார்!

திரு கா. பொ. இரத்தினம், உடுவில் தர்மலிங்கம் எஸ், ஜே, வி. மூன்றுபேரும் அமைதியாகக் கேட்டுக் கொண்டிருந்தனர்.

உடுவில் எம். பி. தர்மலிங்கம் அடுத்து, திரு. ஜி. ஜி. பொன்னம்பலத்துக்கு பதிலளிக்க எழுந்தார்.

''1966-ல் நிறைவேற்றப்பட்ட தமிழ்மொழிச்சட்டப் பிரமாணங்கள் பெரும் மோசடியென்றால், ஏமாற்று வித்தையென்றால் அந்த விதிகளை ஆதரித்து எதற்காகத் தமிழ்க்காங்கிரஸ் வாக்களித்தது?'' என்று ஆரம்பத்திலேயே ஒரு போடு போட்டார்.

ஜி. ஜி. உடனே எழுந்து, ''இந்தக் கேவலமான சட்டப்பிரமாணங்களை நான் எதற்காக ஆதரித்தேன் என்றா கேட்கிறீர்? ''தமிழர்களுக்குக் கிடைக்க விருந்த கொஞ்சச் சலுகையையும் நான் கெடுத்துவிட்டதாக யாழ்ப்பாணத்தில் போய்ப் பிரசாரம் செய்வீர்களே! அதற்காகத்தான்'' என்று தர்மலிங்கத்தைமடக்கினார்.

அதற்கப்புறமும், திரு தர்மலிங்கம் ஒரு வசனத்தை முடிக்குமுன், ஜி. ஜி. எழுந்து ''நான் சொல்லட்டே நியாயம்?' ஒரு கேள்வி கேட்க விடுவியா?'' என்றெல்லாம் குறுக்கிட்டுக் கொண்டேயிருந்தார்.

எஸ். ஜே. வி. பாவம்! ஜி. ஜி. குறுக்கிட்டுப் பேச இடங்கொடாது தொடர்ந்து பேசிக்கொண்டு போகுமாறு தர்மலிங்கத்துக்குச் சைகை காட்டிக் கொண்டேயிருந்தார்! ஆனால், சபையில் கண்டிப்பு நிறைந்த சபாநாயகர் திரு. ஷெர்லி கொரியா இல்லாமல், கமிட்டிகளின் தலைவர் திரு. பாரிஸ் பெரேராதான் தலைமைவகித்துக் கொண்டிருந்ததாலும், தர்மலிங்கத்தின் விட்டுக்கொடுக்கும்மனப்பான்மையினாலும், ஜி. ஜி. அடிக்கடி குறுக்கிட்டு எதையாவது பதில் சொல்லி சபையில் பெரும் சலசலப்பை ஏற்படுத்திக் கொண்டிருந்தார்.

பல்கலைக் கழகமொன்று யாழ்ப்பாணத்திலேயே அமைக்கவேண்டுமென்று பல்கலைக்கழக விசாரணைக் கமிஷன்கள் இரண்டும் சிபார்சு செய்திருக்கின்றன என்ற பொன்னம்பலத்தின் வாதத்தை. ''அவர்கள் கல்வியை மட்டும் வைத்து அரசியலைப்பார்க்காது தீர்மானித்துவிட்டனர்'' என்று தர்மலிங்கம்வெட்டிப்பேசிய போது, ஜி. ஜி. குறுக்கிட்டு, ''அரசியலுக்கும் சர்வகலாசாலைக்கும் என்ன தொடிசல்?'' என்று கேட்டு மடக்கத்தவறவில்லை.

(நாளை முடியும்)

சலம் பூவொடு தூபம் மறந்தறியேன் தமிழோடிசை பாடல் மறந்தறியேன், நலந்தீங்கிலும் உன்னை மறந்தறியேன் உன் நாமம் என்நாவில் மறந்தறியேன், உலந்தார் தலையிற்பலி கொண்டுழல் வாய் உடலுள்ளுறு சூலை தவிர்த்தருளாய், அலந்தேன் அடியேன்அதிகைக்கெடில வீரட்டானத்துறை அம்மானே.

— அப்பர் சுவாமிகள்

டாக்கா, ஆக. 13

கிழக்குப் பாகிஸ்தானில் டாக்கா பல்கலைக்கழகமாணவர்களுக்கிடையில் நடைபெற்ற ஒரு கோஷ்டி சண்டையில் 16 மாணவர்கள் காயமடைந்தார்கள்.

மேஜர் யாஹ்யாக்கானின் அரசாங்கத்தின் புதிய கல்வித் திட்டம் சம்பந்தமாக மாணவர்கள் ஆலோசித்துக் கொண்டிருக்கையில் அவர்களுக்கிடையில் மோதல் ஏற்பட்டது.

இந்த நிகழ்ச்சியைத் தொடர்ந்து ராணுவ ஆட்சியாளர் பல்கலைக் கழகத்தில் எல்லாவித கூட்டங்களுக்கும் தடைவிதித்தார்கள். தடையை மீறுகிறவர்களுக்கு 10 வருடம் வரை சிறைவிதிப்பதற்கான விதிகளும் பிறபிக்கப்பட்டுள்ளன.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி 63ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1969ம் ஆண்டு [illegible] 14-ம் திகதி அச்சிட்டு [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org